
www.tamilarangam.net

# கதிர்

## இராணுவ வலிமையும் பேச்சுவார்த்தையும்



## சுவிஸ் நாட்டு அதிகார பரவலாக்கல்முறை இலங்கை பிரச்சனைக்கு தீர்வாகுமா?



15 டிசம்பர் 1990
அரசியல் இதழ்: 04
அன்பளிப்பு 5,-DM.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கதிர்

"மெல்லெனப் பாயும் ஓடை
கல்லையும் உருட்டிப் பாயும்."

15 டிசம்பர் 1990
அரசியல் இதழ்: 04
அன்பளிப்பு 5,-DM.


'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE


முகவரி:

KATHIR
POSTFACH 61 04 94
1000 BERLIN 61
GERMANY


இலங்கை இனப்பிரச்சனை என்பது வட-கிழக்கு இணைப்பு என்ற தீர்மானத்தில் இப்போது குவியம் பெற்றுள்ளது. வட-கிழக்கு இணைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதையும், எதிர்ப்பு தெரிவிப்பதையும் பொறுத்து அவர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வை விரும்புகிறார்களா, இல்லையா என்பதை இலகுவில் கண்டுபிடித்துவிட முடியும்.

விடுதலை இயக்கங்களும், கிழக்குமாகாணத்தின் பிரதான முஸ்லிம் கட்சிகளும் வட-கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென தமது முடிவை அறிவித்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சி, சிறி லங்கா சுதந்திர கடசி, மக்கள் ஐக்கிய முன்னனி ஆகியன இம்முடிவுக்கு எதிரணி அமைத்துள்ளன. இலங்கை விவகாரம் பற்றி கருத்து வெளியிட்டுள்ள இந்திய பிரதமர் சந்திரசேகர் வட-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்காமல் விடுவது இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை மீறுவதாக இருக்குமென குறிப்பிட்டுள்ளார்.

இந்த பின்னனியில் கிழக்கு மாகாணத்தில் அதன் புவியியல் அம்சங்களை சீர்குலைக்கும் பணிகள் வலுவடைந்து வருகின்றன. திருகோணமலை மாவட்டமும், அம்பாறை மாவட்டமும் இந்த சீர்குலைவுக்குரிய தளங்களாக விளங்கி வருகின்றன. அநுராதபுர மாவட்டத்துடன் இருந்த பதவியா, சிறிபுர என்ற சிங்கள மக்கள் வாழும் பகுதியை திருகோணமலை மாவட்டத்துடன் 1984ல் இணைத்த அன்றைய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி காலம் முதல் திருகோணமலை மாவட்டம் சிங்கள பெரும்பாண்மையுடைய மாவட்டமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அதேபோல் அம்பாறை மாவட்டம் என்பது வட-கிழக்கு பிரச்சனைகளுக்கப்பால் உள்ள ஒரு மாவட்டம் என்ற கருதுகோளிலேயே செயற்பட்டு வந்திருந்தது. முஸ்லிம்களை பெரும்பாண்மையாகவுள்ள இம் மாவட்டத்தில் அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்கள குடியேற்றம் காரணமாக இரண்டாவது பெரும்பாண்மை சிங்கள மக்களாகியுள்ளது. திருகோணமலையில் உள்ள பெரும்பாண்மை சிகள மக்களும், அம்பாறையில் உள்ள முஸ்லிம் பெரும்பாண்மை மக்களும் எதிர்ப்பதாலேயே தாமும் இவ்விணைப்பை எதிர்ப்பதாக இலங்கை அரசாங்கம் கூறி வருகின்றது.

வட-கிழக்கின் நிரந்தர இணைப்புக்கு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் போது சம்மதம் தெரிவித்திருந்த அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா தமது ஆட்சி காலத்தில் நிலவிய குழப்பங்களை கையாண்டு அதனை அமுலாக்கும் விடயத்தை ஒத்திவைத்தார். ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலம் முதல் வட-கிழக்கு இணைப்புக்கு பகிரங்கமாக பலத்த எதிர்ப்பை தெரிவித்து வந்த ஆர். பிரேமதாசாவே இன்றைய ஜனாதிபதியாக இருக்கும்போது வட-கிழக்கு நிரந்தா இணைப்பு சாத்தியமாகும் என நம்பமுடியாது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவ வலிமையும் பேச்சுவார்த்தையும்

# இலங்கை அரசின் இரு முகங்கள்

## பாரிய இராணுவ தயாரிப்பில் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

இலங்கை அரசு அடுத்த ஆண்டுகளில் வட-கிழக்கில் யுத்தம் நிகழ்த்துவதற்காக 5 பில்லியன் ரூபாவினை இராணுவச் செலவினமாக ஒதுக்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கியிடமிருந்து இரண்டு பில்லியன் நிதியை தேசிய பாதுகாப்பு உத்தரவாதத்தினூடாகவும், ஒரு பில்லியன் நிதியை புதிதாக ஒரு பில்லியன் பெறுமதியுள்ள பணத்தாள்களை அச்சிடுவதன் மூலமும் மீதியான 2 பில்லியன் நிதியை பெயர் வெளியிடப்படாத வைப்புகள் மூலமும் பெற்றுக்கொள்ள தீர்மானித்து இருக்கிறது.

இத்தகைய பாரிய நிதி ஒதுக்கீட்டில் 1,100 மில்லியன் ரூபா செலவில் சீனாவிடம் இருந்து விமானங்கள் வாங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே Y-12 ரக விமானங்கள் மூன்று வாங்கப்பட்டுள்ளன. மேலும் சீனாவிடம் இருந்து 130mm நீண்ட வீச்சு பீரங்கிகளையும், 73mm பீரங்கியும், 76mm இயந்திரத் துப்பாக்கியும் பொருத்தப்பட்ட T-85 ரக கவச வாகனங்களையும் நட்புறவு விலையில் பெற்றுள்ளது.

இவற்றில் ஒரு பகுதி மார்கழி மாதமும், மீதி அடுத்த வருடம் பங்குனி மாதமும் வந்துசேர இருக்கின்றன. மேலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தம்வசமுள்ள சிறுரக ஆயுதங்களை உலகச் சந்தையில் மலிவுவிலை விற்க முன்வந்துள்ளதை பயன்படுத்தி இலங்கை அரசும் தனக்கு தேவையான சிறுரக ஆயுதங்களை பெருமளவில் வாங்க தீர்மானித்துள்ளது.

இவை மட்டுமல்லாது இராணுவத்தின் எண்ணிக்கையையும் அதிகரிக்க இருக்கிறது. 1,20,000 இந்திய துருப்புக்கள் வட-கிழக்கில் பிரயோகிக்கப் பட்டபோதே நிலைமை கட்டுக்கடங்கியது என குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா தமது இராணுவ பலத்தை ஒரு இலட்சமாக அதிகரிக்கப் போவதாகக் கூறியுள்ளார். இதற்காக தொகுதி வாரியாக 200 பேர் வீதம் ஆள்திரட்டல் செய்து இருமாத கால குறுகிய இராணுவப் பயிற்சியை வழங்குவதன் மூலம் இராணுவ எண்ணிக்கையை அதிகரிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. தற்போது 6 வார காலத்திற்கு ஒரு தடவை 5000 இராணுவ வீரர்கள்வரை பயிற்சி முடித்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய ஒரு பாரிய இராணுவ தயாரிப்பு பரிசில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை அரசு கேட்டுக் கொண்ட நிதித் தொகைக்கும் மேலாக உதவி கிடைக்கப் பெற்றதன் பின்பே வேகமடைந்துள்ளது. 100 மில்லியன் டொலர் நிதியை வாரி வழங்கிய நாடுகள் இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் உரிமையையும் பெற்றுள்ளன. இது மனிதாபிமானத்தின் பெயரால் இலங்கை விவகாரத்தில் தாம் தலையிடுவதற்கு இந்நாடுகள் உருவாக்கியுள்ள ஒரு புதிய பொறிமுறை ஆகும்.



## தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளில் சுழியோட முனையும் இலங்கை ஜனாதிபதி

பெருமளவு நிதியை இராணுவ செலவினங்களுக்கு ஒதுக்கீடு செய்து இராணுவ தயாரிப்பொன்றில் இறங்கியுள்ள இலங்கை அரசு விடுதலை இயக்கங்களுடனும், கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றி இயக்கங்களும், கட்சிகளும் முன்வைத்த ஆலோசனைகள் அனைத்தும் வட-கிழக்கு இணைப்பை முதன்மைப்படுத்தியே பிரஸ்தாபித்திருந்தன. வட-கிழக்கு இணைப்பு தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை தமிழ் இயக்கங்களும், முஸ்லிம் கட்சிகளும் தெரிவித்திருந்தன. வட-கிழக்கு இணைப்புக்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த இன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தமிழ், முஸ்லிம் கட்சிகளிடையே நிலவிய இந்த முரண்பாட்டில் சுழியோட எத்தனித்தார். வட-கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பதாக குறிப்பிட்டு பிரச்சினையில் இருந்து நழுவி வந்திருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் அமைப்புக்கள் சிலவும் முஸ்லிம் காங்கிரஸ் முதலான கிழக்கு மாகாண முஸ்லிம் கட்சிகளும் தமக்குள் பேச்சுவார்த்தை நடாத்தி வட-கிழக்கு இணைப்புக்கு ஏகமனதான இணக்கம் கண்டிருந்தன. இது ஓர் எதிர்பாராத திருப்பமாக விளங்கியிருந்தது.

இச்சமயத்தில் பாருக் தாகீரை தலைவராக உடைய முஸ்லிம் தேசிய பேரவை வடகிழக்கு இணைப்புக்கு எதிப்புதெரிவிக்கும் வகையில் அவசர மாநாடு ஒன்றை கொழும்பில் உள்ள பண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தில் கூட்டியிருந்தது. இதில் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், சபாநாயகருமான எம்.எச்.மொகமட் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு வடகிழக்கு இணைப்பிற்கு கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்தார். சிறிலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த அனுரா பண்டாரநாயகாவும், மக்கள் ஐக்கிய முன்னணியை சேர்ந்த தினேஷ் குணவார்த்தனாவும் கலந்து கொண்டு இக்கருத்துக்கு ஆதரவாக உரையாற்றியிந்தனர். இவ் அவசர மாநாட்டுக்கு இலங்கை அரசே பின்னணி வகித்துள்ளது என்பதில் ஐயமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த மாதமளவில் நடைபெற்ற இந்த அரசியல் சுழியோட்டங்கள் வட-கிழக்கு இணைப்புக்கு ஆதரவானதும், எதிரானதுமான சக்திகளை உசுப்பிவிட்டிருந்தது.

## வடக்கிலும் கிழக்கிலும் வேறுபட்ட அணுகுமுறைகள்

இலங்கை அரசானது தற்போது வடபகுதியிலும், கிழக்குப்பகுதியிலும் வேறுபட்ட அணுகுமுறைகளை கையாண்டு வருகிறது. இது ஒரு நீண்டகாலமாக பிரயோகிக்கப்பட்டு வந்த உத்தியானாலும் தற்போது புதிய கோணங்களில் இவை பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் பலப்படுத்தப்பட்டுள்ள இராணுவ முகாம்களை பயன்படுத்தி தமிழ்-முஸ்லிம் கிராமங்களை செயலிழக்க செய்யவும், சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்று மாதங்களுக்கு ஒருதடவை சுமார் 2500 சிங்களவர்கள் கிழக்குமாகாண இராணுவ முகாம்களை சுற்றிய விவசாய நிலங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை இப்பகுதிகளிலுள்ள பூர்வீக தமிழ்-முஸ்லிம் மக்கள் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் நகர் பகுதிகளை நோக்கியும், வடபகுதியை நோக்கியும் விரட்டப்பட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் கிராமவாசிகள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை அடுத்து ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் பதற்றங்கள் இலங்கை அரசின் போக்கிற்கு மெருகூட்டுவதாய் அமைந்துள்ளன. இதனால் தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம்மக்கள் தமது பாதுகாப்பை இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பென்பது கேள்விக்குறியான நிலையிலும், பாரிய இராணுவத்தயாரிப்புக்களின் பின்னணியிலும் இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் அந்தரங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

## விடுதலைப்புலிகளின் 20 அம்ச பேச்சுவார்த்தை

விடுதலைப்புலிகள் கடந்த சிலமாதங்களில் இலங்கை அரசுக்கு எதிராக வடபகுதியில் மேற்கொண்டு வந்த தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் நிலைகளை வலுப்படுத்தியுள்ளன. கோட்டையில் இருந்த இராணுவம் வாபஸ் வாங்கப்பட்டதும், மாங்குளத்தில் முகாம் அமைத்திருந்த இராணுவம் தாக்குதலை எதிர் கொள்ள முடியாமல் முகாமைவிட்டு அகன்றதும் விடுதலைப்புலிகள் தரப்பை வலுப்படுத்தியுள்ள இரு இலக்குகளாக அமைந்துள்ளன.

இவ்விரு இராணுவ முகாம்களும் இல்லாது போனதால் யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளில் தமது செல்வாக்கை அதிகளவில் செலுத்தக்கூடிய வாய்ப்பினையும் இவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர். இப்பகுதிகளில் சிவில்நிர்வாகத்தை கண்காணிக்கவும் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை வடபகுதியில் தாம் பிரயோகித்த அதே இராணுவ வழிமுறைகளையே கிழக்கு மாகாணத்திலும் பிரயோகிக்க விடுதலைப்புலிகள் முயன்று வருகின்றனர். ஆயினும் வடபகுதி போல் கிழக்கில் விடுதலைப்புலிகளின் நிலைகள் வலுப்பட்டதாயில்லை. வடபகுதி அணுகுமுறைகள் கிழக்கு மாகாணத்தில் பிரயோகிக்கப்படும் போது இப்பகுதி மக்களின் பாதுகாப்பு என்பது மேலும் அச்சுறுத்தலாய் மாறிவருகிறது.

வடபகுதியில் ஏற்பட்டுள்ள இராணுவ தேக்கநிலையை பயன்படுத்தி விடுதலைப்புலிகள் இருபது அம்சங்கள் உள்ளடக்கிய விடயங்களை முன்வைத்து பேச்சுவார்த்தைக்கு தயாராகியுள்ளனர். இலண்டனில் உள்ள இலங்கை தூதுவர் சேபால ஆர்ட்டிகலவுக்கும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே 20 அம்ச விடயங்களில் பேச்சுக்கள் நடைபெற்றுவருவதாக இலங்கை அரச வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவற்றில் பத்து விடயங்களை எந்த காலகட்டத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதன எனவும், ஏனைய விடயங்கள் பரிசீலித்து தீர்க்கக்கூடியவை எனவும் அவ்வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் அவர்கள் மேற்கொள்ளும் சிவில் நிர்வாக கண்காணிப்பை ஏற்றுக்கொள்ளல், விடுதலைப்புலிகள் தலைமையிலான இராணுவ அணியை தமிழ்மக்களின் பாதுகாப்பு அணியாக ஏற்றுக்கொள்ளல், வடகிழக்கில் தற்காலிக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துதல், மாகாணசபைக்கு மேலாக சமஷ்டியை ஒத்த தீர்வு ஒன்றை இறுதித் தீர்வாக காணுதல் ஆகிய விடயங்களில் இப்பேச்சுவார்த்தையானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இலங்கை அரசுக்கும் , விடுதலை புலிகளுக்குமிடையே உத்தியோகபற்றற்ற முறையில் ஆரம்பமாகியுள்ள இந்தப்பேச்சு வார்த்தைகள் இந்திய அரசியல் மாற்றத்தின் பின்னர் ஏற்பட்ட ஒரு தூரத்து சைகையாகவே வர்ணிக்கப்படுகிறது.

## இந்தியாவின் புதிய தலைமை இலங்கை விவகாரத்தில் வேகத்தை தேடுகிறது.



சந்திரசேகர் தலைமையில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம் இலங்கை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும். சந்திரசேகர் பிரதமராக இருந்தாலும் அவரை தூக்கி நிறுத்தியது ராஜீவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் என்பதால், இலங்கை விவகாரத்தில் 89ம் ஆண்டிற்கு முற்பட்ட நிலைப்பாட்டையே கடைப்பிடிக்க தீர்மானம் ஆகியுள்ளது.

இலங்கை இந்திய உடன்படிக்கையை ஏற்று அதற்கு குறையாத தீர்வுக்கு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் இணக்கம் காணாவிட்டால் இன்றைய இந்திய அரசு முன்னர் கையாண்ட அனைத்து அணுகுமுறைகளையும் கையாள்வதில் ஆர்வம் கொண்டுள்ளது. இதற்கு முன்னோடியாக வி.பி.சிங் ஆட்சிக்காலத்தில் விலக்கி வைக்கப்பட்ட பல அதிகாரிகள்- இலங்கை விவகாரத்தை கையாண்ட அதிகாரிகள்- மீண்டும் நியமனம் பெற்றுள்ளனர்.

இம்மாறுதல்கள் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் போக்கு மீதும் அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன. திருச்சியிலும், அடையாறிலும் தங்கியிருந்த விடுதலைப்புலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுப்பினர்களை கைதுசெய்யுமாறு டெல்கியிலிருந்து வந்த உத்தரவை ஏற்று அவர்களை கைது செய்ததன் மூலம் முதல்வர் கருணாநிதி தனது மத்திய அரசுடனான ஒத்துழைப்பை இனங்காட்டிக்கொண்டார்.

அனைத்து இயக்கங்களையும் அழைத்துப்பேசி இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு முன்னர் வகித்திருந்த பாத்திரத்தை விரைவாக மீட்டிட அவசரம் கொண்டுள்ளது.

## இலங்கை அரசின் இன்றைய முடிவுகள்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் மாற்றத்தினாலும், வடகிழக்கில் விரைவாக அமைதியை நிலைநாட்டும்படி உதவி வழங்கும் நாடுகள் பணித்துள்ளதாலும் இலங்கை அரசு வடகிழக்கில் இராணுவ தயாரிப்பையும் அதேவேளை பேச்சுவார்த்தையையும் ஆரம்பித்திருப்பதாக விளக்கம் கூறுகிறது.

வடகிழக்கில் பரவலாக இந்திய இராணுவம் முன்னர் நிலைகொண்டிருந்தபோது விடுதலைப்புலிகளின் சுதந்தரமான நடமாட்டங்கள் கட்டுப்பட்டிருந்ததாகவும், அத்தகைய ஒரு தருணத்திலேயே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு இசைந்து வந்ததாகவும் குறிப்பிடும் இலங்கை அதிகாரிகள் அத்தகைய ஒரு நிலைமையையே தாம் தோற்றுவிக்கப் போவதாக கூறியுள்ளனர். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறியுள்ள இவர்கள் வடபகுதியில் பரவலான இராணுவ முகாம்கள் அமைப்பதற்காகவே தமது தரைப்படையை விஸ்தரிப்பதாகவும் கூறியுள்ளனர்.

மேற்குலக நாடுகளின் நிதியுதவியுடனும், சீனாவினுடனான நட்புறவுடனும் பாரிய இராணுவ தயாரிப்புகளில் இறங்கியுள்ள இலங்கை அரசின் போக்கும், இலங்கையில் இழந்துபோன தனது பிடியை துரிதமாக மீட்க விரும்பும் இந்தியாவின் முயற்சிகளும் இலங்கையில் அமைதி ஏற்படுவதை பின்தள்ளி வைத்துள்ளன என்றே கருதப்படுகிறது. ●

## சீதனத்தை ஒழிப்போம்!.

எந்தவொரு விடயத்திற்கும் காலக்கோடிட்டு முன்னர் பின்னர் எனப்பிரித்து, வியாக்கியானம் கொடுப்பதும், தவணை சொல்வதும் மனிதனது தவிர்க்கமுடியாத இயல்பு. ஆனால் எப்போது அது பொருந்தும் என்பதுதான் "அந்த" முக்கியமான கேள்வி. சாதாரணர் இதனை சகஜமாக செய்யும்போது அது பெரும்விடயமாக தெரிவதில்லை. ஆனால் தம்மை பற்றி பிறிதானதொரு பிம்பத்தை சுமந்து செல்பவர்கள் தருணமறியாது பிறளும்போது நிலமைகள் விசமத்தனமான வேடிக்கையாகிவிடுகின்றன.

இலண்டனில் தமிழ்நாட்டு அரசியல் தலைவர் ஒருவர் பேசிய கூட்டமொன்றின் முடிவில் ஒரு "கேள்விபதில்" நிகழ்வு இடம்பெற்றது. அதன்போது பிரதான இயக்கமொன்றின் முக்கிய பிரமுகர் தொண்டனாக காட்டிக்கொள்ளும் ஒருவர் எழுந்து நூற்றுக் கணக்கானோர் முன்னிலையில் தனது "கேள்விபதில்" நிகழ்ச்சியை நடத்தினார்.

அந்தக் கேள்விபதில் பிரசங்கத்தின்போது சீதன ஒழிப்பினது முக்கியத்துவத்தையும், தமது இயக்கத்தின் அது குறித்த காத்திரமான முடிவுபற்றியும் விளாசித்தள்ளிய வண்ணமிருந்தார். நல்ல சமாச்சாரம்தான். ஆனால் இருமாதங்களின் முன்னரே யாழ்ப்பாணம் சென்று போதிய சீதனத்துடன் மணம்முடித்து திரும்பியிருந்தார் அந்த நபர். மேலும், சீதனம் போதாதெனப் பிணக்குப்பட்டதால் இலண்டன்வாழ் பெண்ணின் சகோதரர்கள் குறிப்பிட்டதொகை பணத்தை அவரது இலண்டன் திரும்பலின் பின்னர் தரவேண்டியதாகவும் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்களுக்கு நபரின் பிரசங்கம் பிடித்ததோ என்னவோ, அவரின் மைத்துனருக்கோ பொறுமை தாங்கவில்லை. திடீரென எழுந்து குறுக்கிட்டார். "எப்ப உந்த சீதன ஒழிப்பு தொடங்கப் போகுது?" என்று பொதுவாக ஒரு போடுபோட்டார். "உடனேயே தொடங்க வேண்டும்!" என்று அலட்சியமாக கூறிய நபர் தனது பிரசங்கத்தை தொடரவிளைந்தார். "அப்படியென்றால் கிட்டடியிலை வாங்கினவைபாடு என்ன?" மைத்துனர் விடுவதாக இல்லை. "பழசுகளை கதைப்பது வீண் நேரமினக்கேடு" சமாளிக்க முயன்றார் நபர். "இல்லை! இரண்டு மாதங்களுக்கு பின் தள்ளிப்போட்டால் ..... உங்கடை உந்த போராட்டத்தால எனக்கும் ஒரு பத்தாயிரம் பவுண் தேறும் எண்டுபாத்தன்!" என்று கூறிவிட்டு அமர்ந்தார் மைத்துனர். அதன்பின் அந்த நபரது பிதற்றல் தொடரவில்லை.




## கொக்காவிலில் மழை பெய்தால் கொக்குவிலில் குடை எதற்கு?

"தமிழீழப்போர்" வெடித்து ஆண்டுகள் பல சமைந்துபோயினும், தமிழீழப்பற்று இன்னும் பெருமளவில் ஊர்வேலிகள் தாண்டியதாக இல்லை. யூலை 83 இலிருந்து ஈழத்தில் நடத்தப்படும் படுகொலைகளுக்கெதிரான கண்டன எதிர்ப்பு நடவடிக்கைகள் பலவற்றை இலண்டனில் பல குழுக்கள், கோஷ்டிகளால் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் 99% ஆனவை யாழ் குடாநாட்டில் இடம்பெறும் சோக சம்பவங்களை ஒட்டியே அமைந்தவையாக உள்ளன. இதற்கான பௌதீக காரணிகள் ( யாழ் மக்கள் இங்கு 90%) இலகு வானவையாயினும், இதனாலான மனோவியல் காரணிகள் நேரடித்தொடர்பை தர்க்கரீதியில் ஏற்றுக்கொள்ள வைப்பது கடினமான காரியமே.

அண்மையில் கொக்காவில் பலத்த குண்டுவீச்சுக்கு உள்ளானபோது இங்குள்ள பலதொலைபேசி செய்திச்சேவைகளும் அதுபற்றி தகவல்கள் தந்திருந்தன. அந்தக்காலகட்டத்தில் ஒரு வீட்டில் நடந்துமுடிந்த ஞாயிறு விருந்தின் பின்னர் அங்கே குழுமியவர்கள் வழமைபோல் பரவலான "வெத்திலை பாக்கு பொலிற்றிக்ஸ்" கதைக்க தொடங்கினர். எமது கலாச்சார நெறிப்படி பெண்கள் குளாம் சற்றுத் தொலைவிலே தம்பாட்டில் தமது கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது. இவ்வேளையில் ஒருவர் கொக்காவில் குண்டுவீச்சைப்பற்றி ஏதோ கதையில் எடுத்துப்போட்டார். வீட்டுக்காரருக்கோ இது புதுச்செய்தியானமையால் தலையில் பனங்கொட்டையால் அடிபட்டது போல பதைபதைத்துப்போனார். "என்ன?....கொக்குவிலிலும் குண்டுவீச்சோ?....என்ன சரியான அழிவாமே?" என்றார் பதற்றத்துடன். ஏன் இவருக்கு கொக்குவில்மேல் ஒரு தனிப்பிரியம்..? காரணம் சாதாரணமானதுதான். அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொக்குவிலில்தான் மணம்முடித்திருந்தார்....அப்படியானால்?....ஆம், நீங்கள் சரியாக கண்டுபிடித்துவிட்டீர்கள்.... அங்கேதான் அவரது சீதனவீடும் இருக்கிறது.

"இல்லை, கொக்குவிலில்லை.... கொக்காவில்.." சமாதானப்படுத்தினார் கதைசொன்னவர். வீட்டுக்காரர் நிம்மதிப்பெருமூச்சுடன் மீண்டும் நாற்காலியில் முதுகை சாய்க்கும் போது "என்னப்பா.... எங்கடைபக்கத்திலையும் பொம்பரே?" என்றவாறு பதைத்தபடி அவரை நோக்கி ஓடிவந்தார் மனைவியார். "இல்லையப்பா! அது கொக்காவிலிலையாம்.... அங்கை ஒரு பிரச்சனையுமில்லை! நீர் போம்!" என அமைதியுடன் கூறிய குடும்பத்தலைவர் மனைவியை பெண்கள் கூட்டம் நோக்கி விரட்டினார். "அதுதானே.... கடவுள் எங்களை அப்பிடி கைவிடமாட்டார்.... அது கொக்குவிலில்லையாம், கொக்காவிலிலையாம்...."என்றவாறு கதைக்கும் விடயம் எதுவென அறிந்திராத மற்றப்பெண்களுக்கும் விளக்கம் தந்து ஆறுதல் சொல்வதுபோல் போய்சேர்ந்தார் மனைவியார்.

## டாக்டர்களுக்கும் கணிதம் அவசியம்!

டாக்டர் திரு அவர்கள் இலண்டன் வந்து சேர்ந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. தனது மனைவியாரது தாய், தந்தை, சகோதரர்களென ஒட்டு மொத்தமாக பூண்டோடு பெயர்த்துவந்து வெள்ளையரது செல்வம் கொழிக்கும் பூமியில் நட்டுமாகிற்று. போதாமைக்கு யாழ்ப்பாண வீடுவாசல்கள், பொருள்பண்டங்கள் யாவற்றையும் விற்று பவுண்களாக்கி இலண்டன் வங்கிகளில் சேர்த்துவிட்ட திருப்தி வேறு அவரை உந்தியவண்ணம் இருந்தது. மொத்தத்தில் ஐயா புளிப்பு-நியாயம் பேச ரெடி! அடுத்து பரதநாட்டிய அரங்கேற்றங்கள், சாமத்திய சடங்குகளென முறையே பங்குபற்றுவது அவசியமாகிவிடுகிறது. அடுத்து, டாக்டர் திரு அவர்களது தேவவாக்குகளையும் தீர்க்கதரிசனமான முன்மொழிவுகளையும் நாம் கேட்டுச் சகிக்கவேண்டியது கட்டாயமாகிவிடுகிறதென்பது சொல்லவா வேண்டும்! இது ஒரு ஜனநாயக நாடு என்பதை அவ்வளவு இலகுவிலா மறந்துவிடமுடியும்?

ஐயா எவ்வளவு திறமையான டாக்டரோ தெரியாது. ஆனால் கணிதத்திலோ அவர் அறிவு பூச்சியம்!

சுமையாக சோற்றினை உள்ளே இறக்கிவிட்டு, கால்யார் தொந்தியை ஏவிவிட்டு, இடைவெளி உருவாக்கிவிட்டு பேசிக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் (சாமத்தியச்சடங்குப் பங்காளர்களில் சிலர்) புகுந்து கொண்டவர் பெரும் சுமைகளாகவே தனது சிந்தனை கருத்துக்களை மற்றவர்கள்மேல் சுமத்த தொடங்கினார். "நீங்கள் நெடுகலும் மூக்காலை அழுதுகொண்டிருக்கிறதுதான் வேலை! குறைகூறாமால் இருக்க மாட்டியள்!" என ஈழத்தில் இவ்வளவுகாலமும் மாண்டொழிந்து போன அப்பாவி தமிழ்மக்களது பெறுமதி என்ன என்பதை எடைபோட்டுக் கொண்டிருந்த மற்றவர்களை அடக்கியவர் அவர்களது "இறுதி நோக்கம் என்ன?" என கருணையுடன் வினவினார். மற்றவர்களுக்கோ "தமிழீழம்" என்பது இன்றைய நிலையிலும் போக்கிலும் பார்க்கையில் பாரிய சுமையாகத்தான் தெரிந்தது. அதனையே நாசூக்காக கூறிவிடவும் விளைந்தனர் சிலர். மின்னலென பாய்ந்தார் திரு அவர்கள். "என்னைப்பொறுத்தவரை ஒரு மில்லியன் தமிழர் செத்தாலும் தமிழீழம் என்றதுதான் முடிவாய் இருக்கவேணும் என்றதில கவனமாய் இருக்கிறன். அப்பிடியே நீங்களும் உங்களை திடப்படுத்தி கொண்டால்...." என்று கர்ச்சனை செய்தார். யாரும் கலங்கிவிடவில்லை.

"டாக்டர், யாழ்ப்பாணத்தில 700,000 பேர் தான்.. அதுவும் சரியாகச் சொல்லேலாது. உங்களைப் பொறுத்தவரை மலைநாட்டாரும், முஸ்லிமும் எங்கட ஆக்களில்லை. அப்பிடியெண்டால் தமிழீழத்தை யார் எடுப்பது, அங்கு யார் இருப்பினம்... ஒரு மில்லியன் செத்தால்?" பொறுமையுடன் டாக்டர் ஐயாவுடைய லெக்சரைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர். "அட! நீர் அக்கவுண்டன்ட் எனக்குக் கணக்குச் சொல்லாதையும்! ஒரு மில்லியனோ இரண்டு மில்லியனோ சாகிறதைக் கதைத்துக் கொண்டு குறிக்கோளை விட்டுடப்படாது. அதுதான் என்ரை பொயின்ட்" என்றார் டாக்டர் ஆங்கிலத்தில்.

"டாக்டர் உங்களுக்கு கணிதம் வராது போலை. இது எங்கடை எடுகேசன் சிஸ்டத்தினாலை வாற பிழை. சின்ன வயசிலேயே சயன்ஸ், ஆர்ற்ஸ், மற்ஸ், பயலஜி எண்டு பிரிக்கிறதாலை வாற பிரச்சனை

அதுதான் போகட்டும் பறவாயில்லை... உங்களின்ரை மனச்சாட்சிக்கும் மனிதாபிமானத்துக்கும் சீவியத்திலை ஒரு காலமும் training கிடைக்கேல்லைப் போலை!". "நீங்கள் அந்தக்காலத்திலேயே இருந்து கதைச்சு மினைக்கட்டது தான் வேலை!" டாக்டர் சமூகவியல் விளக்கம் தரமுனைந்தார். "இல்லை டாக்டர்! நான் என்ரை பொயின்ருக்கு வாறன். தமிழீழம் கிடைச்சதும் உங்களின்ரை உற்றார் உறவினர் திரும்பிப் போய்ச் சேர்ந்தாலே 200 பிரஜைகளாகிவிடும்". நிதானமாகவே கூறினார் இடையில் குறுக்கிட்டவர். அதன்பின், டாக்டர் அதிகம் பேசவில்லை.

(திண்ணைப்பேச்சுப் பற்றியும் அதை எழுதும் சந்திரசூரியர் பற்றியும் பலதரப்பட்ட கேள்விகள் வாசகர்களிடமிருந்து கதிர் ஆசிரியர் குழுவிற்கு கிடைத்து வருவதை கருத்திற்கொண்டு இதற்குப் பதில் தரும்படி நாம் சந்திரசூரியரிடம் கேட்டபோது அவர் எமக்களித்த பதில் இதோ!!).

## அரிது அரிது
## என்போல் மனிதர் அரிது!.

என்னருமை தமிழ்க்குலமே! என்னை ஏன் இன்னமும் நீ அறிந்திருக்கவில்லை? நான் மிகவும் நல்லவர். நாவில்வல்லவர். அறிவுக்கடல். அன்பின் இருப்பிடம். பிறர்குறைகளை இலகுவில் கண்டு சீர்சிருத்தம்கோரி அவர்கள் வாழ்வை பரிமாணம் செய்வதற்காக எனனையே அர்ப்பணித்துள்ள எரியும் மெழுகுவர்த்தி.

மேலும், சோசலிசம் எனது உயிர்நாடி. எழுத்திலும், மனதிலும், பேச்சிலும், சிந்தனையிலும், ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஒடுக்கப்பட்டோரது மூச்சே ஓங்கி நிற்கிறது. நான் நல்லவர்களுக்கு நட்பின் எல்லை. தீயவர்களின் சிம்மசொற்பனம்.

நான் ஒரு தமிழன். அதனால்போலும் என்னை நீ இன்னமும் கண்டுகொள்ளவில்லை. சிரசின்மேல் கொண்டு அன்றாடம் என்னை நீ அர்ச்சனை செய்வதுமில்லை! அரிது, அரிது என்போல் மனிதர் அரிது என்பதை உணரவுமில்லை!!

சிறுகுறிப்பு: எனது சுத்துமாத்துக்கள் சில காதில்பட்டால் அவையாவும் உனது நன்மைக்காகவே யான் செய்த சமுதாய கடமைகள் என்பதை இப்பொழுதே ஒப்புக்கொள்வாய். மற்றவர்களை தட்டிச்சுத்தி சமுதாயத்தில் சிலபடிகள் முன்னேறியிருப்பின் அவற்றை உனது நியதிகளின்பேரில் நான்செய்த காலத்தின் வினைகள் என்பதை புரிந்து உனது குற்றங்களை ஏற்றுக்கொள்வாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கை இராணுவம், தமிழ் இளைஞர்கள், இந்திய அதிகாரிகள்

# இஸ்ரேலிடம் ஒரே நேரத்தில் பயிற்சி

### மொசாட் உளவாளி ஒஸ்ரோவெஸ்கி கூறும் சுவையான சம்பவங்கள்:

விக்டர் ஒஸ்ரோவெஸ்கி (Victor Ostrovsky) இஸ்ரேலின் உளவுப்படையான மொசாட்டில் நான்கு வருடங்கள் பணியாற்றியவராவார். இவர் மொசாட்டின் படுகொலை பிரிவுக்கு ஆரம்பத்தில் சேர்க்கப்பட்டு பின் மொசாட்டின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். சைமன் லாகாவ் (Simon Lahav) என்ற புனைபெயரில் மொசாட்டில் இவர் செயற்பட்டுவந்திருந்தார்.

41வயதுடைய விக்டர் ஒஸ்ரோவெஸ்கி தற்போது கனடாவில் தலைமறைவ வாழ்க்கையை நடாத்திவருகிறார். இவருடைய தாயார் இஸ்ரேலிய யூதர்; தந்தையார் கனடிய யூதராவார். இவர் சிறுவயதில் இருந்து இஸ்ரேலில் தாயாரின் உறவினருடன் வளர்ந்து வந்தார். தனது 18வது வயதில் இஸ்ரேலிய இராணுவத்தில் இணைந்து இளைய வயதிலேயே இராணுவ அதிகாரியாக பதவி வகித்ததுடன், கடற்படைப்பிரிவில் ஆயுதங்களை பரிசோதனை செய்யும் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரியாகவும் இருந்தார். இவர் ஆரம்ப காலத்தில் இஸ்ரேலின் தொழிற் கட்சியின் தீவிர உறுப்பினராகவும் செயற்பட்டு வந்திருந்தார்.

விக்டர் ஒஸ்ரோவெஸ்கி "ஏமாற்று வழிகளினூடு"(BY WAY OF DECEPTION) என்ற 371 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை பிரபல கனடிய எழுத்தாளர் கிளையர் கொய் (Claire Hoy) என்பவருடன் இணைந்து வெளியிட்டுள்ளார். இப்புத்தகம் இவ்வாண்டு யூலை மாதம் வெளியிடப் பட்டதாகும். இதில் உள்ள பல தகவல்கள் பல நாடுகளில் பணியாற்றும் ஏனைய மொசாட் உறுப்பினர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது என்ற காரணத்தால் அப்புத்தகத்தை தடை செய்யுமாறு இஸ்ரேல் நியூ யோர்க் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந் நீதிமன்றம் இப்புத்தகத்தை தடை செய்வதாக தீர்ப்பளித்திருந்தது. இத்தீர்ப்பை ஆட்சேபித்து வெளியீட்டாளர்கள் தற்போது மனு செய்துள்ளனர். இவ்வழக்கு நடந்த நாட்களில் மட்டும் 50,000 பிரதிகள்வரை விற்பனை யாகியுள்ளன.

பிரித்தானிய உளவுப்படையின் பல தகவல்களை வெளிக்கொண்டு வந்த "ஸ்பை கச்சர்"(Spy catcher) என்ற நூலைவிடவும் இப்புத்தகம் பரவலாக கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இப்புத்தகத்தில் இலங்கை தொடர்பாக வெளிவந்த விடயங்கள் இங்கு மொழிபெயர்த்து தரப்படுகின்றன.

மொசாட்டின் தூரகிழக்கு நாடுகளுக்கும், ஆபிரிக்காவுக்குமான செயற்பாடுகளுக்காக இயங்கிவரும் பிரிவின் தலைவர் "அமியார்"(Amy Yaar) எனபவராவார். இவரது துறையை சார்ந்தவர்கள் தூரகிழக்கு நாடுகளில் நிலைகொண்டு வர்த்தக மற்றும் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டு வந்தனர். இவர்களே மொசாட்டிற்கான தகவல்களை சேகரிக்கும் நபர்களாகவும் விளங்கிவந்தனர். உதாரணமாக இந்தோனிசியாவின் தலைநகரான யகார்த்தாவில் பிரித்தானிய பிரஜைகளுக்குரிய கடவுச்சீட்டுடன் ஒருவர் செயற்பட்டு வந்தார். இந்தோனேசிய அரசுக்கும் இவர்யார் என்பது தெரிந்த விடயம். இவருக்கென தனியானபாதுகாப்பு ஒழுங்குகளும், பணப்பரிமாற்றங் களுக்கான வழிகளும், ஆபத்தான வேளைகளில் நாட்டைவிட்டு வெளியேறக்கூடிய ஏற்பாடுகளும் வழங்கப்பட்டு இருந்தன. இவரது பிரதானபணி இஸ்ரேலின் ஆயுதங் களை விற்பனை செய்தலாகும்.

இதேபோல் யப்பானிலும், ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் ஒவ்வொருவர் செயற்பட்டுவந்தனர். சிறிலங்காவிலும், மலேசியாவிலும் இடையிடையே சிலர் இயங்கி வந்தனர். இவர்களின் வருடாந்த சந்திப்புக்கள் சிசில் தீவுகளில் அமியாரின் தலைமையில் நடைபெற்றுவந்தன.

இத்தகைய அதிகாரிகள் மூன்றுபடி முறைகளில் தமது பணிகளை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப் படுவது வழக்கம். நாட்டின் தேவை என்ன என்பதையும், அவர்களது பயம் எத்தகையது என்பதையும், அவர்களது எதிரிகள் சம்பந்தமாகவும் நேரடியான தகவல்களை திரட்டிக்கொள்வர்.

இதன்பின்பு அரசாங்கத்துடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு இராணுவ ரீதியில் வேண்டிய, போதிய ஆயுத, பயிற்சி உதவிகளை இஸ்ரேலிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டு மென்பதே இவர்களுக்குரிய இரண்டாவது பணியாகும்.

அந்நாட்டு அரசாங்கத்தின் தலைவர் இஸ்ரேலிய ஆயுதங்களில் தங்கியிருக்க தயாரானதும், இஸ்ரேலிய அரசு உங்கள் நாட்டின் விவசாய கருவிகள் போன்ற உபகரணங்களை வாங்குவதற்கு விரும்புவதாக அந்த அதிகாரி பதிலளித்து உறவுகளை பரஸ்பரம் ஆக்கிக்கொள்ளவேண்டும். இது இரு நாடுகளுக்குமிடையிலான ராஜதந்திர உறவுகளை வெளிப் படையாக வைத்துக்கொள்ளும் நிலைக்கு இட்டுச்செல்லவேண்டும். இதுவே அவ்வதிகாரியின் மூன்றாவது பணியும், முக்கிய பணியுமாகும்.

இந்த வழிமுறைகளை சிறி லங்காவிலும் செய்திருந்தனர். அமியார் சிறிலங்காவிற்கான தொடர்புகளை மேற்கொண்டு அவர்களுக்கு வேண்டிய இராணுவ தளபாடங்கள், பயிற்சிகள் வழங்கியதன் மூலம் உறவுகளை உருவாக்கி கொண்டார். சிறிலங்காவின் வடபகுதி கடற் பகுதியில் ரோந்து சேவையை மேற்கொள்ள கூடிய "டெவோரா" (Devora) என்றழைக்கப்படும் இஸ்ரேலிய பீரங்கி படகுகள் (P.T.boats) வழங்கப்பட்டிருந்தன.

அதேவேளை அமியார் என்பவரே சிறிலங்கா அரசுக்கு எதிராக போராடும் தமிழர்களுக்கு இப்பீரங்கி படகுகளை நிர்மூலமாக்கும் கருவிகளை (anti P.T.boat equipments) வழங்கியிருந்தார். மேலும் இவ்விருசாராருக்கும் ஒருவருக்கொருவர் தெரியாமல் பயிற்சிகளும் அளித்துவந்தார்.

இவைமட்டுமல்லாமல் உலக வங்கியிடமிருந்தும், ஏனைய வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தும் பலமில்லியன் டொலர்களை அபிவிருத்தியென்ற போர்வையில பெற்று இஸ்ரேல் வழங்கும் ஆயுதங்களுக்குரிய பணமாக மாறறக்கூடிய ஏமாற்று வழிகளையும் ஆலோசனையாக வழங்கியிருந்தார்.

சிறிலங்காவின் சில பகுதிகளில் விவசாயிகள் விரக்தியுற்றிருப்பது குறித்து சிறிலங்கா கவலையடைந்திருந்தது. இவ்வாறு விரக்தியடைந்து, அதிருப்திக்குள்ளாகியிருந்த விவசாயிகளை பிரித்தெடுத்து இத்தீவின் இன்னொரு பகுதிக்கு இடம் மாற்ற இவர்கள் விரும்பியிருந்தனர். இத்தேவையை பயன்படுத்தி அமியார் சிறிலங்காவுடனான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். இவரே மகாவலி அபிவிருத்தி திட்டத்தை மையமாக வைத்து எவ்வாறு ஏனைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம் என்பது பற்றி ஆலோசனை வழங்கியவராவார்.

இத்திட்டம் சிறிலங்காவில் மின்சார சக்தியை இருமடங் காக்குவதையும், 7,50,000 ஏக்கர் நிலப் பரப்பை புதிய நீர்ப்பாசன நிலங்களாக்குவதையும் இலக்கு களாக உடையதாகும். 2.5 பில்லியன் அமெரிக்கடொலர் நிதித்

## பென்னி ஜயவர்த்தனாவைப் பற்றி இஸ்ரேலிய உளவாளி கூறியவை.



விக்ரர் ஒஸ்ரோவெஸ்கி

நான் பணியாற்றி கொண்டிருந்தபோது ஒருமுறை ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் மருமகன் பென்னி ஜயவர்த்தனா இஸ்ரேலுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவருக்கு நான் "சைமன்" என்ற புனை பெயரில் பாதுகாப்பு அளிக்கும் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தேன்.

ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் மருமகன் பென்னியை வழக்கமாக உல்லாச பயணிகள் செல்லும் இடங்களுக்கு அழைத்து சென்றிருந்தேன். பென்னி பார்வைக்கு ரம்மியமான பெண். உடலமைப்பில் அக்கினோவைப்போல் இருந்தார். அவரது கணவர் பௌத்தராக இருந்ததால் இவரும் பௌத்தராக மாறியிருந்தார். ஆயினும் அவருக்கு கிறிஸ்தவ மதத்திலேயே ஈடுபாடு அதிகம் இருந்தது. கிறிஸ்தவ புனித இடங்களை விருப்பத்துடன் சென்று பார்த்தார். நான் கலிலேயா (Galilee) என்ற புனித இடத்திற்கும் அவரை அழைத்து சென்றிருந்தேன்.

அச்சந்தர்ப்பங்களில் அவருடன் பல பொதுவான விடயங்கள்பற்றி உரையாடியிருந்தேன். அவர் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் நடைமுறைகள் பற்றியும், ஆயுத கொள்வனவுகள் பற்றியும் இவைகள் பற்றி அரசாங்க உயர் மட்டத்தில் நடைபெற்று வந்த இரகசிய விவாதங்கள் பற்றியும் பல விபரங்களை தந்திருந்தார்.

பென்னி ஜயவர்த்தனா என்னிடம் கூறிய பல அரசியல் விவரங்கள் படிப்படியாக வெளியே தெரியவந்ததும் 150 இஸ்ரேலிய உளவாளிகள் அங்கிருந்து தகவல்கள் எடுப்பதாக சிறிலங்கா அரசு வேடிக்கையான குற்றச்சாட்டை எம்மீது சுமத்தியிருந்தது.

இக்காலங்களில் இஸ்ரேலுடன் சிறிலங்கா எந்தவிதமான ராஜதந்திர உறவுகளையும் வைத்திருக்கவில்லை. நாம் அவர்களால் முழுமையாக அங்கீகரிக்கப்படாதவர்களாகவே இருந்தோம். அமியாரும் அவரது உதவியாளர் ஒருவரும் சிறிலங்காவிற்கு அக்காலங்களில் அடிக்கடி போய்வருவதை தவிர உண்மையில் வேறு எவரும் அங்கு இருந்திருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவையையுடைய இத்திட்டத்திற்கு உலகவங்கி, ஐக்கிய அமெரிக்கா, கனடா, சுவீடன், யப்பான், ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகியன உதவி புரிந்து வருகின்றன.

ஆரம்பத்தில் உலக வங்கியோ, ஏனைய முதலீட்டாளர்களோ இத் திட்டத்தின் உள்ளடக்கம் குறித்து அதிகம் புரிந்திருக்கவில்லை. ஆயினும் அதுகுறித்து ஒரு கவனத்தை மனதில் வைத்திருந்தனர். 30 வருடகால திட்டமாக இருந்த மகாவலி திட்டமானது சிறிலங்காவின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் 1977ல் துரித மகாவலி அபிவிருத்தி திட்டமாக அமியாரின் உதவியுடன் மாற்றப்பட்ட பின்பே சக்திவாய்ந்த ஒன்றாக உரு மாற்றம் பெற்றது.

உலக வங்கியின் நம்பிக்கையை பெறும் வகையில் செயற்திட்ட அறிக்கையை தயாரிக்க இரு வல்லுனர்கள் வழங்கப்பட்டனர். ஒருவர் ஜெருசலம் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பொருளியல் வல்லுனராவார். மற்றையவர் விவசாயத்துறை பேராசிரியராவார். இவ்விருவரும் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும், அவற்றிற்கான நிதித்திட்டறிக்கையும் தயாரித்திருந்தனர். இஸ்ரேலில் உள்ள பிரதான நிறுவனங்களில் ஒன்றான சோலெ போனாக் (Solel Bonah) இத்திட்டத்திற்கு உதவிபுரியும் பாரிய ஒப்பந்த நிறுவனமாக குறிப்பிடப்பட்டது.

இத்திட்டத்தின் செயலாக்கம் பற்றி நேரடியாக அறிந்து கொள்வதற்கு உலக வங்கியின் அதிகாரிகள் வருகை தரும்போது உள்ளூர்வாசிகள் எவ்வாறு அவர்களுடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் பயிற்றப்பட்டது. இதன்படி பாதுகாப்பியின்மைகளை உலகவங்கி அதிகாரிகளுக்கு மிகைப்படுத்தி கூறி சிலகுறிப்பிட்ட பாதைகளால் மட்டும் அழைத்து சென்று இவர்களின் பார்வைக்காகவே செய்து முடிக்கப்பட்ட திட்டத்தின் சிலபகுதிகள் காட்டப்பட்டுவந்தன.

**************************************

"நான் உங்களை விமானநிலையத்தில் சந்திக்கிறேன். எங்களிடம் இங்கு பயிற்சி பெறுவதற்கு சிறிலங்காவில் இருந்து ஒரு குழு வருகின்றது". ஒரு முறை அமியார் இவ்வாறு எனக்குக்கூறி லண்டனில் இருந்து வரும் விமானம் ஒன்றை அவர் எதிர்பார்த்து நின்றார். நானும் அமியாருடன் இக்குழுவை அழைத்து செல்லும் பணிகளில் இணைந்து கொண்டேன்.

"இவர்களுக்காக எதுவும் செய்ய வேண்டியதில்லை."என அமியார் குறிப்பிட்டதும் நான் அதன் அர்த்தம் என்ன என அவரிடம் கேட்டேன்.

"இவர்கள் குரங்குகளைப்போன்றவர்கள். இவர்கள் விருத்தியடையாத இடத்தில் இருந்து வருகிறார்கள், அவர்களுக்கு மரங்களைத்தவிர அதிகம் எதுவும் தெரியாது,

## நான்
## என் நாட்டுக்காகவே
## பயணம் செய்தேன்.



பென்னி ஜயவர்த்தனா

என்னுடைய பயணம் உத்தியோகபூர்வமற்றது, இதில் இரகசியம் எதுவும் இல்லை. மற்றவர்கள் எனது பயணத்தில் அதிகம் அக்கறை எடுத்து கேட்பதில் என்ன இருக்கிறது என எனக்கு புரியவில்லை. எனது பயணம் என்னுடையதும், ரவியினுடையதும் சொந்த பணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். என்னுடைய 5 நாள் பயணத்தில் பெரும்பாலான நாட்களை மருத்துவ நிலையங்களை பார்வையிடுவதிலேயே செலவழித்திருந்தேன். காயமடைந்த படையினருக்கு எவ்வகையான நிவாரண பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அங்கு அறிந்திருந்தேன்.

நான் ஒரு அரசியல் வாதியோ அன்றி இராணுவ துறையை சார்ந்தவளோ அல்ல. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட படைவீரர்களின் அவலங்களையும், அவர்களது மனைவி, குழந்தைகளின் துயரங்களையும் கண்டுள்ளேன். என்னால் இயன்ற சிறிய உதவிகளை எனது நாட்டுக்கு செய்ய முயறசித்திருந்தேன்.

என்னுடைய பரந்த நல்லெண்ணங்களை புரிந்து கொள்ளாதவர்கள் எனது பயணத்தை பற்றி எவ்வளவு பொய்களையும் எழுதட்டும்.

( பென்னி ஜயவர்த்தனா Sunday Times இற்கு வழங்கிய பேட்டியிலிருந்து 04.11.1990. )



வெலிஓயா சிங்கள குடியேற்றத் திட்டத்திற்கு பென்னி ஜயவர்த்தனா கணவர் ரவி ஜயவர்த்தனாவுடன் விஜயம் செய்தபோது...

www.tamilarangam.net

அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாம்." இவ்வாறு அமியார் எனக்கு பதிலளித்தார்.

அமியாரும் நானும் அன்றுவந்திறங்கிய 9 பேரையும் விமானநிலையத்தின் பின்பக்கமாக கூட்டிச்சென்று, குளிரூட்டப்பட்ட வாகனத்தில் அழைத்துச்சென்றோம். இதுவே எம்மிடம் வந்து சேர்ந்த முதலாவது குழுவாகும். இவ்வாறு 50 பேர்வரையில் வந்து சேர்ந்தவர்கள் தமக்குள் மூன்று பிரிவுகளாக பிரிந்து கொண்டனர்.

* ஒரு குழு பயங்கரவாத முறியடிப்பு பயிற்சிகளில் ஈடுபட்டது. பெத்தா ரிக்வா (Petha Tikvah) அருகில் உள்ள கவார் சேர்க்கின் (Kafar Shirkin) என்றழைக்கப்படும் இராணுவ தளத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கடத்தப்பட்ட பஸ் வண்டிகளையும், விமானங்களையும் மீட்பது எப்படி என்றும், ஒரு கட்டடத்தில் உள்ள கடத்தல் காரர்களை எப்படி மடக்கிப்பிடிப்பது எனவும், ஹெலிகப்ரரில் இருந்து ஒரு கயிற்றின் உதவியுடன் எப்படி இறங்குவது எனவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

* இன்னொரு குழு இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யும் குழுவாக இருந்தது. இவர்கள் இஸ்ரேலிய தயாரிப்பான "ஊசி" (Uzis) இயந்திர துப்பாக்கியையும், குண்டுகள் துளைக்காத கவச உடைகளையும், விசேட கைக்குண்டுகளையும் பெருமளவில் கொள்வனவு செய்தனர். இவர்கள் 7 அல்லது 8 பீரங்கிப் படகுகளையும் கொள்வனவு செய்தனர். டெவொரா எனப்படும் இத்தகைய பீரங்கிப்படகுகள் சிறிலங்காவின் வடபகுதி கடற்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கென வாங்கப்பட்டன.

* மூன்றாவது குழு உயர் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கியிருந்தது. இவர்கள் நவீன "ராடர்" கருவிகளையும், இதர கடற்படைக்குரிய கருவிகளையும் கொள்வனவு செய்யும் குழுவாக இருந்தனர்.

நான் ஒருமுறை சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் கொண்ட குழுவுடன் பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்தேன். அல்ரா (Alta) ராடர் உற்பத்தியாளர்களிடம் இவர்களை அழைத்து செல்ல பணிக்கப் பட்டிருந்தேன். அல்ரா ராடர் உற்பத்தியாளரின் பிரதிநிதி சிறிலங்கா இராணுவக் குழுவினரின் ராடர் கொள்வனவு பட்டியலை பார்த்தபின் "இவர்கள் வெறுமனே பார்பதற்கே வந்துள்ளார்கள், அவர்கள் எமது ராடர்களை வாங்க போவதில்லை" என்றார்.

"ஏன்?" நான் கேட்டேன்.

"இந்த குரங்குகள் கொண்டுவந்த ராடர் பட்டியலில் எமது பெயர் எழுதியில்லை. டெக்கா (Deca) எனப்படும் பிரித்தானிய ராடர் உற்பத்தியாளரின் பெயரே இருக்கிறது. ஆதலால் இவர்களுக்கு முன்கூட்டியே தெரியும் தாம் எதைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று. இவர்களுக்கு வாழைப்பழத்தை கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். நீர் உமது நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறீர்." என்றார்.

"அது சரி... என்றாலும் இவர்களுக்கு ஏதாவது ஒரு படத்தை காட்டி அவர்களை குசிப்படுத்த வேண்டு மல்லவா?"

"சரி இவர்களுக்கு ஒரு வேடிக்கை காட்டுவோம்" என்றார் அல்ரா பிரதிநிதி.

இந்த சம்பாசனைகளை கீப்புறு மொழியிலேயே நாம் மேற்கொண்டு வந்தோம்.

பின்னர் அவர் இன்னுமொரு அலுவலகத்திற்குச்சென்று, பலவர்ண வரைபடங்களை எடுத்துக்கொண்டார். இவை துறைமுகங்களில் எண்ணை கசிவுகளை துப்பரவு செய்யுமோர் கருவியின் வரைபடங்களாகும். இவ்வரைபடங்கள் கீப்புறு மொழியிலேயே இருந்தன. இவ்வரைபடங்களைக் காட்டி ஆங்கில மொழியிலே "உயர் திறனுடைய ராடர் கருவியின் வரைபடம் இதுவென" அவர் கூறத்தொடங்கினார். இந்த ராடர் ஒருவர் நீரில் நீந்தும்போது அவரது அடிப்பாதத்தின் அளவையும், அவர் பெயர், முகவரிகளையும், அவரது இரத்தப்பிரிவையும் சொல்லி விடுமென

ஒரு கட்டத்தில் அல்ரா பிரதிநிதி கூறியபோது, எனக்கு சிரிப்பை அடக்குவது கஸ்டமாய் போய்விட்டது.

அவர் தன்னுடைய விளக்கவுரையை முடித்தபின்பு சிறிலங்கா அதிகாரிகள் குழு நன்றி தெரிவித்துவிட்டு, இவ்வளவுதூரம் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டதே எனக்கூறி, தாம் வியப்படைவதாகவும் கூறினர். அத்துடன் இந்த ராடர்கருவி தமது பீரங்கிப் படகுகளுக்கு பொருத்தமுடியாது எனவும் கூறினர். சிறிலங்கா அதிகாரிகள் எங்களிடம் அவர்களுடைய பீரங்கி படகுக்கு பொருந்தாது எனக்கூறியது எமக்கு மேலும் சிரிப்பூட்டியது. ஏனென்றால் அந்த பீரங்கி படகுகள் நாமே தயாரித்தவையாகும்.

ஒருமுறை அமியார் என்னை கவார்சேர்க்கின் எனுமிடத்தில் உள்ள பயிற்சி தளத்திற்கு செல்லுமாறு பணித்தார். அங்கு சிறிலங்காவின் விசேடகுழு ஒன்று பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்குமாறு அமியார் எனக்கு கூறியிருந்தார். என்னை அவதானமாக நடந்து கொள்ளும்படியும், அனைத்து நடவடிக்கைகளையும் யோசியுடன் (Yosy) இணைந்து செய்யும்படியும் வலியுறுத்தி கூறியிருந்தார்.

யோசி என்பவர் ஒரு குழுவுக்கு பயிற்சி வழங்கி வருபவராவார். அவரிடம் பயிற்சி பெறுபவர்களும் நான் தொடர்பு வைத்துள்ள சிறிலங்கா குழுவினரும் ஒருவரை ஒருவர் சந்திக்காதபடி அவதானமாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. யோசியின் மேற்பார்வையில் இருந்த குழுவினர் தமிழர்கள். எனது மேற்பார்வையில் இருந்த குழுவினர் சிங்களவராவார்.



பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக விளங்கிய ரவி ஜயவர்த்தனா இஸ்ரேலிய ஆயுதத்தில் அழகு பார்க்கிறார்-கொக்கட்டிச் சோலைப் பயிற்சி முகாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த இரு பகுதியினரும் ஒருவருக் கொருவர் பரம எதிரிகள். இவர்கள் தொடுத்துள்ள யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் இரு தரப்பிலும் பலியாகியுள்ளன.சிறி லங்கா அரசு இந்திய அதிகாரிகள் தமிழர்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் வழங்குவதாக குற்றம் சாட்டியிருந்தது. உண்மையில் இவர்கள் மொசாட்டையே குற்றம் சாட்டியிருக்க வேண்டும்.

தமிழர்கள் கடற்படை தளம் ஒன்றில் பயிற்சி பெற்றுவந்தனர். தொடர்புசாதன துறையிலும், தந்திரப்பொறிகள் வைப்பதிலும், டெவொரா போன்ற பீரங்கி படகுகளை நிர்மூலமாக்கும் முறை பற்றியும் இவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

இருவாரங்களில் எமக்கு திகிலான பிரச்சனை ஒன்று ஆரம்பமானது. ஒருவருக்கொருவர் எதிரிகளான தமிழ், சிங்கள குழுக்களை சில பயிற்சிகளுக்காக, கவர்சேர்க்கின் என்ற பயிற்சித்தளத்திலேயே இருபகுதியினரையும் பயிற்றுவிக்க வேண்டியிருந்தது. இது ஓர் பாரிய பயிற்சி தளமாகும். பயிற்சிகளின் போது சில வேளைகளில் இவ்விரு பகுதியினரும் அருகருகாக ஒருவருக்கொருவர் தெரியாமல் சென்றதுண்டு.

இப்பயிற்சிகளின் பின் சிங்களவர்களை உள்ளடக்கிய குழுவை நாம் கடற்படை தளமொன்றுக்கு பயிற்சி அளிக்க அழைத்து சென்றிருந்தோம். அது இதற்கு முன்னர் தமிழர்களுக்கு பயிற்சியளித்த அதே கடற்படை தளமாகும். தமிழர்களுக்கு வழங்கிய அதே பயிற்சி உத்திகளை சிங்களவர்களுக்கும் வழங்கியிருந்தோம். இவை ஒரு விசித்திரமான நடவடிக்கைகளாக இருந்தன. அமியார் என்ற ஒரு நபருடைய இத்தகைய நடவடிக்கைகளால் தமிழ்-சிங்கள குழுக்கள் ஒன்றை ஒன்று சந்திந்து இருக்குமானால் இஸ்ரேலினுடைய அரசியல் நிலமைகள் தர்ம சங்கடத்துக்குள்ளாகி இருக்கும். இஸ்ரேலிய பிரதமர் பீரேக்கு இப்படி நடக்கிறது என்று தெரிந்திருக்குமாயின் அவர் இரவில் நித்திரையே செய்திருக்க மாட்டார் என்பது நிச்சயம். நல்ல காலமாக இது அவருக்கு தெரிந்திருக்கவில்லை.

"எங்களுக்கு இன்னுமொரு பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது." இவ்வாறு என்னிடம் அமியார் கூறினார். "27 சுவாற் (27 SWAT) என்ற பெயரில் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய குழு இங்கு வர இருக்கிறது." என்றார்.

"கடவுளே! என்ன இது? எங்களிடம் சிங்களவர்கள், தமிழர்கள் இப்போது இந்தியர்கள். அடுத்தது யாரோ?" நான் அமியாரை பார்த்துக்கேட்டேன்.

யோசியின் மேற்பார்வையில் தமிழர்களுக்கு நடைபெற்று வந்த பயிற்சி தளத்திலேயே 27 சுவாற் என்ற இந்திய குழுவினருக்கும் பயிற்சி வழங்க ஏற்பாடாகி இருந்தது. ●

# வாசகர்களிடமிருந்து....

**சுதாகரன்**
**டென்மார்க்**

கனம் கதிர் ஆசிரியர் குழுவினருக்கு,

கதிர் 5வது இதழில் வெளியாகிய வடகிழக்கில் மோதலைத் தொடர தயங்குகிறது இலங்கை அரசு என்ற கட்டுரையில் ஈரோஸ்-புலிகள் உறவு பற்றி எழுதியிருந்தீர்கள். ஈரோஸ் அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் ஈரோசின் எதிர்காலத்தைப் பற்றி ஏதேனும் குறிப்பிடவில்லை. ஈரோஸ் முழுவதும் புலிகளுடன் இணைந்துவிட்டதா? எஞ்சியிருப்போரின் எதிர்கால நிலைப்பாடுதான் என்ன ?

இறந்த பின்பே இல்லை உருவகக்கதை நன்றாக இருந்தபோதும் அதற்கான படம் பொருத்தமற்றதாகவே எனக்குத் தெரிகிறது. இறுதிப்பக்க கவிதை நிழலுக்குத் தசை போர்த்து ... நன்றாக இருந்தது. விடுதலை வேட்கையால் தம்மையே அழிக்கும் மக்களின் உணர்வுகள் ஒருபுறமும், அதிகார வெறி பிடித்தோரின் ஆட்சிவெறியின் உச்சக்கட்ட உணர்வுகளையும் எளிதாக எடுத்துக்காட்டியுள்ளார் கவிஞர் பரம்சோதி.

*'குருதிச் சமுத்திரத்தில் நீந்த வந்து*
*வெற்றிக்கொடி நாட்டும் நாளைய மனிதனே!*
*உனது காலத்திலாவது உன் தேசியக்கொடியில்*
*வெள்ளைப்புறாவை பறக்கவிடு"*

என்ற வரிகள் மனிதாபிமானம் படைத்த மனித உள்ளங்களை ஒரு கணம் சிந்திக்க வைக்காமல் இருக்கமுடியாது. பாராட்டுக்கள் கவிஞர் பரம்சோதிக்கு.

**செந்தூரான்**
**சென்னை**

அன்பின் கதிரினருக்கு

"கதிர்" இதழ் கிடைக்கப் பெற்றேன். இலங்கையிலிருந்து எவ்வளவோ தூரத்துக்கு அப்பால் சென்றும், தாங்கள் தங்கள் மக்களுக்காக எழுதுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் வாழ்த்துகிறேன். அரசியல் இதழாக வெளிவரும் கதிர் அவ்வப்போதைய சர்வதேச அரசியல் மாற்றங்களையும் சுட்டிக்காட்டினால் நன்றாக இருக்கும். மேலும் 'திண்ணைப் பேச்சு" போன்ற அம்சங்கள் அவசியம்தானா என யோசித்துப் பார்க்கவும்.

**கிருஷ்ணபிள்ளை**
**அவுஸ்திரேலியா**

கதிர் ஆசிரியர் குழுவிற்கு

தாங்கள் அனுப்பிவைத்த கதிர் பத்திரிகை கிடைக்கப்பெற்றேன். வெளிநாடுகளிலிருந்து எனக்கு கிடைக்கப் பெற்ற பத்திரிகைளில் அமைப்புவடிவத்திலும், கொம்பூட்டர் எழுத்து பதிவிலும் கதிர் மிகவும் தரம் வாயந்ததாக உள்ளது என்பதை நான் உங்களுக்கு தெரிவித்தே ஆகவேட்டும்.

மேலும் வெளிநாடுகளில் வெளிவரும் பத்திரிகை என்பதால் அவ்வப்பகுதிகளில் வாழும் மக்களுக்காக சமய சம்பந்தமாகவும், எமது கலாச்சார ரீதியாக நாம் நடைமுறைப்படுத்தி வருபவை பற்றியும் எழுதினால் நல்லது என்று நம்புகிறேன். (உ+ம் தீபாவளி, கார்த்திகைவிளக்கீடு....) அத்துடன் தாங்கள் எழுதிவரும் வெளிநாடுகளில் எமது மக்களுக்கான நடவடிக்கைகள் (நிறவெறி) போன்றவை பற்றி விரிவாக மேலும் எழுதினால் நல்லது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

● 8 சதுரமைல் அளவுடைய மன்னார் தீவை அகதிகளுக்கான இடமாக மாற்றுவதற்கு இந்தியாவும் இலங்கையும் கூட்டாக எடுத்த முயற்சியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனமும் சம்மதம் தெரிவித்திருந்த போதும் இத்தீவை சுற்றி ஆயுதம் தாங்கிய குழுக்களின் நடமாட்டம் இருப்பதால் சாத்தியப் படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை சென்று பார்வையிடுவதற்கு இலங்கை அரச பிரதிநிதிகளுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

● மாலைதீவில் நடந்த சார்க் உச்சிமாநாட்டின் போது இந்தியப் பிரதமர் சந்திரசேகரை இலங்கைப் பிரதமர் டி.பி.விஜயதுங்க சந்தித்து இலங்கைப் பிரச்சனை தொடர்பாக பேசியுள்ளார். இச் சந்திப்பின் போது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவி கோரும் பட்சத்தில் இலங்கைக்கு தாம் உதவி வழங்குவதாகவும், இது விடயமாக புதிய இந்திய வெளி உறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் எனவும் கூறியுள்ளார். இதேவேளை இலங்கைப் பிரதமர் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்குத் திருப்பியனுப்பும் படியும் கேட்டுக்கொண்டார். இவ் அகதிகளை அவர்களின் இருப்பிடங்களுக்குத் திருப்பியனுப்பும் முன்னர் இலங்கையுள்ள அகதி முகாம்களில் தற்காலிகமாக தங்கவைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் வெளிநாட்டுக் கடன் அதிகரித்துள்ளது.

இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 17,000 ரூபா வெளிநாட்டுக் கடனுடன் பிறக்கிறது, அங்கு வாழும் ஒவ்வொரு பிரஜையும் 2600 ரூபா கடனுடன் வாழுகிறனர். கடந்த 13 வருட திறந்த பொருளாதாரக் கொள்கையால் நாடு 1,54,744 மில்லியன் ரூபாவை வெளிநாட்டுக் கடனாக செலுத்தவேண்டியிருக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வரும் போது 4,968 மில்லியன் ரூபாவாக இருந்த இக்கடன் 1991ம் ஆண்டு 4,40,000 மில்லியன் ரூபா வரை செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் இத்திறந்த பொருளாதாரக் கொள்கையால் நாட்டில் விலைவாசி என்றுமில்லாதவாறு 30% வரை அதிகரித்துள்ளது. இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. 1977ம் ஆண்டு 8 ரூபாவாக இருந்த ஒரு $ தற்போது 40 ரூபாவாக அதிகரித்துள்ளது. 50,000 பெண்களின் புடவைத் தொழில்வாய்ப்பைக் கருதி ஏற்படுத்தப்பட்ட கட்டுநாயக்கா சுதந்தரவர்த்தக வலயத்தினால் 1,50,000 கிராமப்புற நெசவாளர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். இவற்றின் உச்சக்கட்டமாக 1978ம் ஆண்டு ஜனாதிபதி விசேஷ சட்டமானது தொழிலாளர்களது உரிமைகளைப் பறிப்பதுடன், வேலை நிறுத்தம் போன்றவற்றைச் செய்வதற்கும் தடைவிதித்துள்ளது. ●

# சிதறல்கள்

● ஈராக் குவைத்தினைக் கைப்பற்றியதன் பின்னர் ஏற்பட்ட வளைகுடா நெருக்கடியால் இலங்கை பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எண்ணை இறக்குமதிகளிலும், தேயிலை ஏற்றுமதிகளிலும், குடிபெயர்ந்த தொழிலாளர்களின் சம்பாத்தியங்களின் மூலம் வரும் சுமார் மூன்று பில்லியன் ரூபா வருவாயை இழந்துள்ளது.

குவைத், சவுதி அரேபிய நாடுகளிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான உதவிகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ளது. கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதார சமூகங்களிடம் இருந்தும் பெருந்தொகையான நிதியைப் பெற்றுள்ளது.

● சிங்கப்பூரில் இருந்து மார்சேய்ல்(பிரான்ஸ்) வரையும் உள்ள தென்னாசிய நாடுகளின் 15 நகரங்களை இணைக்கும் Optical Fiber Submarine Cable System என்ற திட்டத்தில் இலங்கையும் தன்னை இணைத்துள்ளது. இதேவேளை இலங்கையில் தனியார் தொலைக்காட்சி சேவையை ஏற்படுத்தி ஊக்குவிக்கப் போவதாக இலங்கை தகவல் அமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக மகாராஜா நிறுவத்தினால் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்திவருகின்றனர். இப்பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் பட்சத்தில் தனியார் தொலைக்காட்சி சேவையை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளனர்.

● இலங்கையை 6 வருடங்களில் புதிதாக தொழில்மயப்படுத்தும் நாடாக மாற்ற புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முதல் கட்டமாக "மக்கள்மயப்படுத்தல் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு 18 கூட்டுத்தாபனங்கள் அரசவுடமையாக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## மனித உரிமைக் குழு இலங்கை விஜயம்

ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமை ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று மாசி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இக்குழு இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை செய்வதற்காகவே வரவுள்ளனர். ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தவருமான திருமதி. கிறின்னோட்டி, இரு பிரசித்தி பெற்ற பெல்ஜியம் சட்டத்தரணிகளும் இக்குழுவில் அடங்குவர்.

சீனப்பிரதமர் திரு.லீ பொங் கூடிய சீக்கிரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இவ்விஜயத்தின் போது 40 சீன அதிகாரிகள் கூடவே வரவுள்ளனர். இவ் அதிகாரிகளை உள்ளடக்கிய சீனப் பிரதமரின் விஜயம் இந்தியா தொடர்பான இலங்கை வெளியுறவுக் கொள்கையில் ஒரு நெருக்கடியை தோற்றுவிக்கும் எனக் கருதப்படுகிறது. ●

## மாலைதீவு சதிமுயற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் விரைவில் விடுதலை.

1988ம் ஆண்டு மாலைதீவு அரசுக்கு எதிராக சதிமுயற்சியில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்ட இலங்கை தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கு மாலைதீவு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் மாலைதீவில் நடைபெற்ற தெற்காசிய பிராந்தியங்களின் மாநாட்டுக்கு சென்ற இலங்கைப் பிரதமர் டி.பி.விஜயதுங்க மாலைதீவு அரசுடன் இவ் இளைஞர்களின் விடுதலை பற்றி பேச்சுவார்த்தை நடாத்தியதை அடுத்தே இவ் இணக்கம் காணப்பட்டுள்ளது. ●

● 1971ம் ஆண்டு நாடுதழுவிய கிளர்ச்சியின் போது 2000 இளைஞர்கள் கொல்லப்பட்டும், 12,000 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளு மன்றத்தில் பேசியுள்ளார். ஆனால் ஐக்கிய தேசிய கட்சி அரசு 20,000 இளைஞர்களைக் கொன்றும் 12,500 இளைஞர்களை கைது செய்தும் உள்ளது.

இலங்கை அரசு ஜனதா விமுக்தி பெரமுனை இயக்கத்தின் தலைவர் ரோகண விஜய வீராவினதும், அவரது மனைவி சித்திராங்கனியினதும் பெயரில் இருந்த அனைத்து அசையும், அசையாத சொத்துக்களையும் பறிமுதல் செய்து அரசுடமை யாக்கியுள்ளது.

● வடபகுதிக்கு அனுப்பப் பட்டு வரும் மருந்து வகைகளுக்கு கூட்டுப்படை தலைமையகம் கட்டுப்பாடு விதித்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் போதியளவு மருந்துவகைகள் கிடைக்கப் பெறாமல் பெரும் அவஸ்தைக்குள்ளாயுள்ளனர். மேலும் மகிழடித் தீவு வைத்தியசாலையில் வைத்தியர்கள் இல்லாததால் மருந்துக் கலவையாளர்களாகப் பணிபுரிபவர்கள் வைத்தியம் பார்க்கிறார்கள்.

● வடக்குக்கிழக்கு நிரந்தர இணைப்புத் தொடர்பாக பேசுவதற்கு ஜனாதிபதியால் நடத்தப்பட்ட வட்டமேசை மாநாடு பின்போடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் வடகிழக்கு இணைப்பு தொடர்பாக தமிழ் முஸ்லிம் கடசிகள் இணக்கம் கண்டிருக்கும் அதேவேளை தென்பகுதியில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளதாகும். தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அவர்களுக்கென ஒரு சபையை ஏற்படுத்துவதென இணக்கம் காணப்பட்டிருந்தது.

வடகிழக்கில் செயலற்றுப் போயுள்ள மாகாணசபைக்குப் பதிலாக வடகிழக்கிற்கு என ஒரு நிர்வாகத்தை இலங்கை அரசு ஏற்படுத்தவுள்ளது. இந் நிர்வாகத்திற்கு 4 சிங்களவர்களை உள்ளடக்கிய 6 அதிகாரிகளைக் கொண்ட அமைப்பை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது.

● யூன் மாதத்தில் இருந்து நடைபெற்று வந்த மோதல்களால் திருகோணமலைப்பகுதியில் 158 பேரும், மட்டக்களப்பு பகுதியில் 1100 பேரும் காணாமல் போயுள் ளனர். மட்டக்களப்பு இப்போ வழமைக்கு திரும்பியதால் அகதி முகாம்களில் உள்ளவர்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி செல்கிறார்கள். மன்னாரில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களை கற்பிட்டியிலிருந்து மீண்டும் குடியமர்த்த இராணுவமும், கடற்படையும் மேற்கொண்ட முயற்சி முஸ்லிம் மக்கள் ஒத்து ழைக்காததால் தோல்வியடைந்து உள்ளது.

● இலங்கைப் போராளிகளின் கடற்போக்குவரத்தைக் கட்டுப் படுத்து முகமாக தூத்துக்குடியில் இந்தியக்கடற்படையினர் புதிதாக ஒரு கடற்படை முகாமை அமைத்துள்ளனர். இங்கிருந்து மன்னார் வரையிலான கடற் பிராந்தியத்தில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்குப்படாமல் பாதுகாப்பதற்கு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

www.tamilarangam.net

# வன்முறையும் வறுமையும்

## இன்றைய சிறுவர்கள்

எஸ்.ஞானி



உலகம் முழுவதும் ஒக்டோபர் மாதம் 1ம் நாள் உலக சிறுவர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. உலகெங்கனும் வாழும் கோடிக்கணக்கான சிறுவர்கள் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சனைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை ஆராய்ந்து, அவற்றை தீர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான வழிமுறைகளை கண்டறிவதற்காக 70 நாடுகளின் அரசுத்தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் சமூகசேவையாளர்கள் ஆகியோர் ஒன்று கூடி உச்சி மாநாடு ஒன்றை செப்டம்பர் 29-30ம் திகதிகளில் நியூயோர்க்கில் நடத்தியிருந்தனர்.

இம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டுகளின் படி உலகில் இன்று 3 கோடி சிறுவர்கள் வீதியோரங்களில் வாழ்கின்றார்கள். 5 கோடி சிறுவர்கள் பாதுகாப்பற்ற, சுகாதாரமற்ற நிலமைகளில் வேலை செய்கிறார்கள்; 10 கோடி சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி கூட கிடைப்பதில்லை; 15 கோடி சிறுவர்கள் பசியாலும், பட்டினியாலும் வாடுகின்றனர். 70 இலட்சம் சிறுவர்கள் அகதிகளாகவுள்ளனர். சுமார் 2 இலட்சம் சிறுவர்கள் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவற்றை விட சின்னம்மை, கக்குவான், வலிப்பு, நிமோனியா, வாந்திபேதி, நீர்வற்றுதல் போன்ற தடுக்கக் கூடிய நோய்களினால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில் மரணமடைகிறார்கள். மேலும் யுத்தங்கள், அரசியல் கலவரங்கள், குழப்பங்கள் என்பவற்றால் தோன்றும் வன்முறைகளினாலும் இவர்களின் மரணங்கள் அதிகரித்து கொண்டே வருகிறது. ஆசியச் சிறுவர்களே இதில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். போசாக்கின்மையால் வாழும் உலகச் சிறுவர்களில் பாதிப்பேர் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், பாக்கிஸ்தான், மாலைதீவு, இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளில் வாழும் சிறுவர்கள் ஆவார்.

### குடும்ப, சமூக பாதுகாப்பற்ற சந்ததி.

இலங்கையைப் பொறுத்த வரையில் மேற்கூறிய பிரச்சனைகளால் எதிர்காலம் அச்சுறுத்தலாக அமைந்துள்ள இளைய தலைமுறையினர் என தமிழ் மக்கள் வாழும் பகுதிகளைக் குறிப்பிடலாம். இப்பகுதிகளில் சந்ததி சந்ததியாக வறுமையினாலும், இந்நூற்றாண்டின் 70 வதின் பின்னர் வன்முறைகளாலும் நமது இளைய தலைமுறை பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 50% அதிகமானவர்கள் பராயமடையாத இளம் சந்ததியினர். இவர்களுக்கு குடும்பப் பாதுகாப்போ அன்றி சமூகப் பாதுகாப்போ கிட்டாத நிலையில் உடல், உள காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அதிர்ச்சியடைந்தும், ஊனமுற்றவர்களாக தமது எதிர்காலத்தை பறிகொடுத்து சொந்த அடையாளத்தை தொலைத்தவர்களாக காணப்படுகின்றனர்.

இதனால் இன்றுள்ள தமிழ் இளைய தலைமுறையானது வறுமையில் இருந்தும், வன்முறையில் இருந்தும் தன்னை மீட்டுக் கொள்வதற்காக சிறுவர் ஊழியச் சந்தைக்கு செல்லல், அல்லது வெளிநாடுகளுக்கு செல்லுதல் என்பன பொதுவாக இடம் பெற்று வருகின்றன. அதேவேளை ஆயுதங்களிலும், ஆயுதபயிற்சிகளிலும் ஈர்ப்புக் கொண்டு, வன்முறைகளில் நாட்டமுடையவர்களாகவும் மாறிவருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் குடும்பச் சூழலில் உள்ள வறுமையின் நிமித்தம் ஏற்படும் பிரச்சனைகளால் குடும்பச்சுமை சுமக்கும் ஒருவராகவும், அதே வேளை இனவாத்தின் பெயரால் புறக்கணிக்கப்பட்டு சமூகப் பாதுகாப்பு, உத்தரவாதம் கிடைக்காத நிலையில், சிறுவர்கள் ஊழியச் சந்தைக்கு பலவந்தமாக தள்ளப்படுகிறார்கள். இங்கு இவர்கள் தமது ஆற்றலுக்கும் அப்பால் பெருந் தோட்டங்களிலும் வீடுகளில் பணியாட்களாகவும், கடைகள், சந்தைகள் என்பவற்றில் சுமை தூக்குபவர்களாகவும், சாப்பாட்டுக்கடைகள் சுத்தம் செய்பவர்களாகவும், வீதிகளில் பிச்சை எடுப்பவர்களாகவும், விபச்சாரம் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஊழியச் சந்தைக்குச் செல்லும் சிறுவர்களின் மிக மலிவான உழைப்பின் மூலமாக இலாபம் குவிக்கப் படுகிறது.

வறுமையினாலும், கடின உழைப்பினாலும் பாதிக்கப்பட்டுள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் போசாக்கின்மையாலும், சுகாதாரமின்மையாலும், கல்வியின்மையாலும் உளரீதியாக காயப்பட்டு, உடல்ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். இப்படியான பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட மூன்று சந்ததியினரை இன்றைய தலைமுறையினராகிய நாம் மலையகத்தில் சந்தித்து உள்ளோம்.

### வன்முறைகளால் வழிதவறிப்போகும் தலைமுறை

இளைய தலைமுறையின் இன்னுமொரு பகுதியினர் வன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைகளுக்கு பலியாகியுள்ளதுடன், தொடர்ந்தும் வன்முறைகளால் சூழப்பட்டு பாதிப்புக்குள்ளாகின்றனர். கடந்த இருசகாப்தத்தில் பாரிய இராணுவ படையெடுப்பு மூலம் யுத்தங்களைச் சந்தித்துள்ளது. இவ் யுத்தங்களில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவம், பின்னர் இந்திய இராணுவம், இராணுவங்களுக்கு எதிராக மோதல் தொடுத்துள்ள விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றின் இராணுவ நடவடிக்கைகளில் அகப்பட்டு கொல்லப்பட்டும், காயமடைந்தும் பெற்றோர்களை இழந்தவர்களும் அல்லது பாதுகாப்பு கருதி வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களால் கைவிடப்பட்டு அல்லது விட்டு விலகிச் சென்றதால் சிறுவர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

நாட்டில் சட்டமும், ஒழுங்கும் முற்றாக சீர்குலைந்த நிலையில் தோன்றியுள்ள யுத்த நிலையால், இராணுவ நடவடிக்கைகளாலும் கொலை செய்யப்படுவதும், கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகளில் சித்திரவதை உள்ளாக்கப்படுவதும், பணயக் கைதிகளாக பாவிக்கப்படுவதும், பாரிய குண்டுவீச்சு தாக்குதல்களால் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர். மேற்கூறியவற்றால் பாதிக்கப்பட்ட இவர்களுக்கு குடும்பப்பராமரிப்பு அல்லது சமூகப் பாதுகாப்பு கிட்டாத நிலையில் தம்மை வன்முறைகளில் ஈடுபடுத்திக் கொள்ளும் மனோநிலைக்கு மாற்றம் பெற்றுவருகின்றனர். மேற்கூறியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக இங்குள்ள 15 வயது வரையிலான சிறுவர்களே.

இராணுவச் செயற்பாடுகளுக்காக சேர்க்கப்படுபவர்கள் தமது அபிலாசைகளை நீண்ட நாட்களுக்கு பூர்த்தி செய்ய முடியாது. இவர்கள் இராணுவ செயற்பாடு கருதி குறுகிய காலப்பயிற்சிக்குட்படுத்தப் படுகின்றனர். அத்துடன் எதிரியுடன் ஒப்பிடும் போது உடல்-உளரீதியாக தேர்ச்சி அற்றவர்களாக காணப்படுகிறார்கள். எனவே நீண்டகாலம் இராணுவ சேவையில் தங்கியிருக்க முடியாமல் வெளியே வரும் போது இவர்களால் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான அடிப்படை கல்வி வசதியோ, தொழில்திறனோ இவர்களிடம் இருக்காது. இதனால் இவர்கள் தம்மை வாழவைப்பதற்காக சட்டவிரோத, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிவருகிறது.

இதே போல் இங்கிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இலட்சக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தங்கியுள்ளனர். வெளிநாடுகளில் இவர்கள் அந்நாடுகளால் அகதிகள் என்ற தராதரத்தின் கீழ் வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர். இவர்கள் வன்முறைகளில் இருந்து தப்பிச் சென்றாலும் அங்கு மேலும் வேறுவகையிலான உளரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

ஆகவே குறைவிருத்தி அடைந்துள்ள நாடாகிய எமது நாட்டை விட இவர்கள் தஞ்சம் கோரிய நாடுகள் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஆற்றலுள்ளதாக இருப்பதால் இங்கிருந்து சென்ற இன்றைய தலைமுறையினரோ, அன்றி தற்போது படையெடுத்துக் கொண்டிருக்கும் இளைய தலைமுறையினரோ அவ் ஆற்றலுக்கும் வளர்ச்சிப் போக்கிற்கும் ஈடு கொடுக்கமுடியாமல் பின்தள்ளிய நிலைக்கே தள்ளப்படுகிறது. மேற்குலக நாடுகளுக்கும், முதலாளித்துவத்துக்கும் எதிரான அமைப்பு முறையொன்று உருவாகமல் இருப்பதற்காகவே மேற்குலக நாடுகள் இந்த அகதிகள் என்ற நிலையை உருவாக்கி வைத்துள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் சென்ற எமது மூத்ததலைமுறை இதனை நன்கு புரிந்திருந்தும் இளைய தலைமுறையை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது எமது சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாகிவிட்டது. அதாவது முன்னர் எமது பிரதேசங்களிலேயே பிள்ளைகளை பெருமளவு பணம் செலவழித்து படிப்பித்து, உத்தியோகம் பார்க்க வைத்து சீதன பரிமாற்றத்துக்குரிய மூலதனமாக ஒரு குழந்தையை நினைத்தார்களோ, அதனையே இன்று இலட்சக்கணக்கில் செலவழித்து வெளிநாடுகளுக்கு சிறுவர்களை அனுப்புவதன் மூலம் தமது இலாபம் தேடும் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இவ்விரு வழிகளிலும் பாதிக்கப்பட்ட இரு தலைமுறையினரை நாம் வட-கிழக்கு பகுதிகளில் பார்க்கக் கூடியதாக உள்ளது.

ஆகவே பிள்ளை செல்வம் பெறுமதிமிக்க ஒரு சொத்தாகும். இன்றைய சந்ததி நாளைய பிரஜைகள். அவர்களுடையவாழ்வு இந்த நூற்றாண்டுடனோ முடிவதில்லை, அவர்கள் அடுத்த நூற்றாண்டும் வாழவேண்டியவர்கள். ●

## இரண்டாம் தலைமுறைக்கு...

இளைய தலைமுறையே
எழுந்து
எமது சுமைகளை
தாங்குக!

எமது
கனவுகளும்
உறுதியும்
துவண்டு போயிற்று.

சொந்தங்களை துறந்தும்
காதலை மறந்தும்
இலட்சியத்தை சுமந்து
கடமை புரிந்தோம்.
தாய் முகம் மறந்து
தாயகம்தேடி
போராட்டம் புரிந்தோம்.

எமக்கு முன்னால்
வீரர்கள் தெரிகிறார்கள்.
அராஜகத்தை எதிர்த்தவர்களும்
அடக்க நினைப்பதனால்......
விடியல் இப்போது
வெகு தூரத்தில்.

இரண்டாம் தலைமுறையே
எழுந்து வருக!
இனிய விடியலுக்கு
அடித்தளமிடுக!

"ரூபன்"

## அன்றும் இன்றும்.

முன் பெல்லாம்
தோட்டத்து கொட்டிலில்
காற்று வாங்கி
படுப்பதற்காக
நான் செல்லும் போது
அம்மா சொல்வாள்
போகாதே!
பாம்புகள் வரும்
என்று.

இன்று
அம்மா சொல்லுகிறாள்
வீட்டில் படுக்காதே
தோட்டத்து கொட்டிலில்
மறைந்து படு
என்று.

குப்பிளான் ஜெகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ் நாட்டு
அரசியல் அமைப்பிலுள்ள

# அதிகாரப்பரவலாக்கம்

## இவை இலங்கைக்கு பொருத்தமாகுமா?

ஜே.கேசவன்



**சுவிஸ்-பலஸ்தீன ஒன்றியத்தின் ஓர் அங்கத்தினரான 38 வயதுடைய திரு பீற்றர் லொயன்பெக்கர், ஒரு வரலாற்று ஆய்வாளராவர். சுவிஸ் தொழிலாளர் கட்சியினால் (PdAS) வெளியிடப்படும் வாராந்தப் பத்திரிகையான "முன்னேற்றம்" இல் ஆசிரியராக பணியாற்றும் பீற்றர் நீண்டகாலமாக இலங்கை விவகாரத்தில் ஈடுபாடுள்ளவர்.**

ஐரோப்பாவின் இதயமாகவும், உலகின் சொர்க்காபுரியாகவும் வர்ணிக்கப்பட்டு வரும் சுவிற்சலாந்தில் நடைபெற்று வரும் அரசியல் அமைப்பு பற்றி திரு. பீற்றர் லொயன்பெக்கருடன் மேற்கொண்ட உரையாடல்களில் இருந்து சிலவற்றை இங்கு தருகிறோம்.

இலங்கையை விடவும் சிறிய பரப்பளவையும், குறைந்த சனத்தொகையையுமுடைய சுவிற்சலாந்தில் சுமார் 41,000 சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் அண்ணளவாக 67 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு ஜேர்மன்மொழி பேசுபவர்கள் 65% மாகவும், பிரஞ்சுமொழி பேசுபவர்கள் 18% மாகவும், இத்தாலிமொழி பேசுபவர்கள் 10% மாகவும் விளங்கியிருக்க சுவிஸ்நாட்டின் பூர்வீகக் குடிகளான சுவிஸ்ரோமானிய மொழி பேசுபவர்கள் 1% மாகவும், வேறுமொழி பேசுபவர்கள் 6% மாகவும் விளங்குகின்றனர்.

1291ம் ஆண்டுக்கு முன்பு அடக்குமுறை ஆட்சிபுரிந்த மன்னர் கெஸ்லர் (Gessller) என்பவர் தனது சிலையை ஆங்காங்கே நிறுவி பொதுமக்கள் செல்லும்போது அச்சிலைக்கு மரியாதை செலுத்த வேண்டுமென உத்தரவு இட்டதாக வரலாற்று நிகழ்வொன்று கூறுகிறது. இம்மன்னனின் ஆட்சிக்கு எதிராக ஆங்காங்கே எதிர்ப்புகளை நடாத்தி வந்த வில்கெய்ம் ரெல் (Willheim Tell) என்பவர் கெஸ்லரின் சிலைக்கு மரியாதை செலுத்த மறுத்ததனால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார். வில்கெய்ம்ரெல் தனது மகனின் தலையின்மேல் அப்பிள் பழத்தை வைத்து அம்பெய்து அப்பழத்தை வீழ்த்தும்படி கெஸ்லரினால் உத்தரவிடப்பட்டார். வில்கெய்ம் வைத்தகுறி பழத்திலேயே பட்டதால் அவரின் மகன் உயிர் தப்பினார்.

இருப்பினும் தன்னை மானபங்கப்படுத்தியதற்காக வில்கைம்ரெல் கெஸ்லரைப் படுகொலை செய்திருந்தார். அன்றிலிருந்து கொடுங்கோன்மை ஆட்சியிலிருந்து தாம் விடுபட்டதாக சுவிஸ் மக்கள் பிரகடனம் செய்து தேசிய தினத்தின் போது வில்கெய்ம் ரெல்லின் கோசத்தை எழுப்பி வருகின்றனர்.

மன்னர் கெஸ்லர் (Gessller) கொலை செய்யப்பட்ட நிகழ்சியை அடிப்படையாக வைத்து 1291ல் தமக்கு தேசிய சுதந்திரம் கிடைத்ததாகவும், 1991ம் ஆண்டு ஆகஸ்ற் 1ம் திகதி 700 வது தேசிய சுதந்திர தினமாக கொண்டாட இருக்கின்றனர்.

கெஸ்லர் மன்னரின் வீழ்ச்சியின் பின்னர் 1291ம் ஆண்டு ஊறி (Uri), சிவைற்ஸ் (Schwyz) உன்ரர்வால்ட் (Unterwald) ஆகிய மூன்று மாநிலங்களும் (Kanton) ஒன்றிணைக்கப்பட்டு சமஸ்டி ஆட்சி முறையின்கீழ் சுவிற்சலாந்து ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நாட்டின் அரசியல் அமைப்பு பற்றியும், இது இலங்கை இனப்பிரச்சனையின் தீர்வுக்கு ஒரு மாதிரி வடிவமாக அமைய முடியுமா என்பதுபற்றியும் திரு.பீற்றருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

**சுவிஸ் நாட்டின் அரசியல் அமைப்பின் அதிகாரபீடங்களை பற்றி கலந்துரையாடிய போது....**

சுவிஸ்நாடு இருவகைப்பட்ட வழிமுறைகளை தனது அரசியல் சாசனத்தில் கொண்டுள்ளது. தீர்மானம் இயற்றுவதில் ஜனநாயக வழிமுறைகளையும், தீர்மானங்களை அமுலாக்குவதில் சமஷ்டி முறையையும் பின்பற்றுகிறது. சமஸ்டிப்பேரவை (Bundesversammlung) மாநில அவை (Kantonrat), பிரதேச சபை (Gemeinderat) ஆகிய மூன்று அதிகாரபீடங்கள் இங்கு பிரதானமாக அமையப்பெற்றுள்ளன. சமஸ்டிப்பேரவையே ஆகக் கூடுதலான அதிகாரப் பீடமாகும். இதற்கு அடுத்தபடியாக மாநில அவையும், மாநில அவைக்குட்பட்டதாக பிரதேச சபைகளும் இயங்கி வருகின்றன.

சமஸ்டிப்பேரவையானது மூன்று உபபிரிவுகளை உடையது. சமஸ்டி அவை (Bundesrat), தேசிய அவை (Nationalrat), மேல் அவை (Standesrat) என இவை அழைக்கப்படும்.

சுகிர் கொம்

www.tamilarangam.net

சமஸ்டி பேரவையானது 244 பிரதிநிதிகளையுடையது. இதில் 200 பிரதிநிதிகள் தேசிய அவை உறுப்பினர்களாகவும், 44 பிரதிநிதிகள் மேலவை உறுப்பினர்களாகவும் விளங்குகின்றனர். தேசிய அவையின் 200 உறுப்பினர்களில் 7 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்படுவதுதான் சமஸ்டி அவையாகும் (Bundesrat).

இவ் 7 பிரதிநிதிகளுமே மத்திய நிர்வாகிகளாக விளங்குகின்றனர். உள்நாட்டு விவகாரம், வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, பொதுசன பொருளாதாரம், பொலிசும்-நீதியும், சக்தி - போக்குவரத்து - தொடர்புசாதன துறைகள் ஆகிய 7 அமைச்சகங்களுக்கும் இவர்கள் தனித்தனியே பொறுப்பாய் விளங்குகின்றனர். இவர்களில் ஒருவர் சுவிஸ் நாட்டின் தலைவராக (பிரதமராக) தேர்வுசெய்யப்படுகிறார்.

சுவிஸ்நாட்டு தலைவருக்குரிய தேர்வு ஏனைய நாடுகளை போலல்லாது இங்கு ஒவ்வோர் ஆண்டிலும் இவ் ஏழு பேரில் ஒருவர் மாறி மாறி தெரிவு செய்யப்படுகிறார்.

## இந்த அதிகார பீடங்களுக்குரிய பிரதிநிதிகள் தேர்வுமுறை பற்றி....

இங்கு விகிதாசார தேர்தல் முறையே பின்பற்றப்படுகிறது. கட்சிக்கும், கட்சிகளினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குமாக இரண்டு வாக்குகள் தேர்தல்களின் போது மக்களால் புள்ளடியிடப்பட்டு வருகின்றன. சமஸ்டிப்பேரவை (Bundes versammlung), மாநில அவை (Kantonrat), பிரதேச சபை (Gemeinde rat) ஆகியவற்றுக்கு இங்கு தேர்தல்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன.

244 உறுப்பினர்களை கொண்ட சமஸ்டிப் பேரவையில் தேசிய அவைக்குரிய உறுப்பினர்கள் 200 பேரும் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். மீதமான 44 மேலவை உறுப்பினர்களும் மாநில அவையில் இருந்து நியமிக்கப் படுகின்றனர்.

இங்கு 25 மாநிலங்கள் உண்டு. இவற்றில் 19 முழுமையான மாநிலங்கள் எனவும், 6 அரை மாநிலங்கள் எனவும் வரையறுக்கப் பட்டுள்ளன. மேலும் 4000 இற்கும் அதிகமான பிரதேச சபைகள் இங்கு இயங்கி வருகின்றன. மாநில அவைக்கும், பிரதேச சபைகளுக்கும் உரிய பிரதிநிதிகளும் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலமும், பிரதேசத்திற்கு பிரதேசமும் மாறுபட்டு இருக்கின்றன. ஒவ்வொரு மாநில அவையும் பிரதேச சபையும் தமக்குள் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுத்து நிர்வகித்து வருகின்றனர்.

## தீர்மானங்கள் இயற்றும் முறைபற்றி ....

சமஸ்டிப் பேரவை மாநில அவை, பிரதேசசபை என்பன தனித் தனியேயும், கூட்டாகவும் தீர்மானங்கள் இயற்றும் ஆற்றல் உடையவையாகும். இவை எந்தெந்த துறைகளில் தீர்மானமும், சட்டங்களும் இயற்ற முடியுமென அரசியல் சாசனத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது. (இவை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.)

7 உறுப்பினர்களையுடைய சமஸ்டி அவையில் தேசியரீதியில் அவசியமான சட்டங்கள், தீர்மானங்கள் முதலில் மேற்கொள்ளப்படுகின்றன. இவை 244 உறுப்பினர் உடைய சமஸ்டிப் பேரவையில் நிறைவேற்றப்படும். இவை மாநில அளவில் அமுலாக்கப்படுவதற்கு மாநில அவை அங்கீகாரம் வழங்கும். மாநில பொலிஸ்துறை, வறுமை ஒழிப்பு பணிகள், வதிவிட விவகாரங்கள், மதம் ஆகிய நான்கு துறைகளில் மாநிலங்கள் தனித்து தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உடையனவாகும். ஏனைய விவகாரங்களில் மாநில அவைக்கும், சமஸ்டிப் பேரவைக்கும் இடையே இணக்கம் இருந்தால் மட்டுமே அவை சட்டமாக இயற்றப்படமுடியும்.

மேற்படி அவைகளால் நிறைவேற்றப்பட முடியாத தீர்மானங்கள் இருவகைப்பட்ட வாக்கெடுப்புக்கள் மூலம் நிறைவேற்றப்படுவதுண்டு.

தேசிய ரீதியிலான தீர்மானங்களாக இருக்கும் பட்சத்தில் அவற்றை சர்வஜன வாக்கெடுப்புக்கு கொண்டு செல்வதன் மூலம் தீர்மானிக்கப் படுகிறது. உதாரரணமாக ஐக்கிய நாடுகள் சபையில் சுவிஸ் அங்கத்துவம் வகிப்பதா இல்லையா எனக்கோரி நடாத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் சேரக்கூடாதென மக்கள் வாக்களித்திருந்தனர். இதேபோல் சுவிஸ் பிரஜைகளுக்கு கட்டாய இராணுவசேவை தேவையா இல்லையா எனக் கோரி சர்வஜன வாக்கெடுப்புக்கு நடாத்தப்பட்ட போது கட்டாய இராணுவ சேவை தேவையென வாக்களிக்கப் பட்டிருந்தது.

இதேபோல் மாநில அளவில் மாநில அவையால் நிறைவேற்றப் படமுடியாத விவகாரங்கள் அபிப்பிராய வாக்களிப்பின் மூலம் நிறைவேற்றப்படுவதுண்டு. இத்தகைய வாக்களிப்பு முறையினால் சில விசித்திரங்களும் நடைபெற்றுள்ளன. Appenzeller மாநிலத்தில் மாநில அவைக்கும், அதற்குட்பட்ட பிரதேசசபைகளுக்கும் உரிய பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமையை பெண்களுக்கு வழங்கக்கூடாதென அபிப்பிராய வாக்கெடுப்பு தீர்ப்புக்கூறியுள்ளது. பெண்கள் இம்மாநிலத்தில் இன்றும் வாக்குரிமை அற்றவர்களாகவே இருக்கிறார்கள். அதேவேளை தேசிய அவைக்குரிய தேசிய பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் வாக்களிக்கும் உரிமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

தேசிய ரீதியில் சுவிஸ் அரசினால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தினால் மக்கள் அதிருப்தி அடைவார்களாயின் ஒரு கட்சியோ அல்லது தனிமனிதனோ ஒரு இலட்சத்துக்கு குறையாத கையொப்பங்களுடைய மனுவை கொடுக்கும் பட்சத்தில் அச்சட்டம் முழுமையான மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

இதேபோல் மாநில அவையால் கொண்டுவரப்பட்ட சட்டத்தால் மக்கள் அதிருப்தி அடைவார்களாயின் 50,000 இற்கு குறையாத கையொப்பங்களையுடைய மனுவின் மூலம் அச்சட்டத்தை மாநில அளவில் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடப்பட முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அதிகாரப் பரவலாக்கங்களில் திருப்தியான நிலை நிலவுகின்றதா என கலந்துரையாடிய போது...**

தேசியவருமானப் பங்கீடு, பாதுகாப்பு ஆகியவற்றில் கடைப்பிடிக்கப்படும் அதிகார எல்லைகளைக் கொண்டே அதிகாரப் பரவலாக்கலின் தன்மை இங்கு எடை போடப்படுகிறது.

ஒவ்வொரு மாநிலங்களும் தமக்கென மாநில பொலிசாரை வைத்திருப்பதால் தனித்துவமான பாதுகாப்பு ஏற்பாடாக இது அமைந்துவிடுகிறது.

தேசிய வருமானப்பகிர்வுக்கு உதாரணமாக 1987ம் ஆண்டை எடுத்துக்கொண்டால் மத்திய அரசுக்கு 47% வீதமும் மாநில அரசுக்கு 33.2%மும், பிரதேச சபைகளுக்கு 24.1% வருமானமும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதுபோலவே ஒவ்வோர் ஆண்டுகளிலும் பகிர்ந்தளிக்கப்படும் வருமானங்களில் இவை தமக்குள்ளே திருப்தியடைந்து விடுகின்றன.

மேலும் வருமானவரி விதிப்பு விடயங்களில் மாநில அவைக்கு இருக்கும் தனித்துவமான சுதந்திரமும் பிரச்சனைகளைக் குறைத்துள்ளது எனலாம். உதாரணமாக சுக் (Zug) மாநிலத்தில் தொழிற்சாலைகளுக்கு வருமான வரி அறவிடப்படுவதில்லை என பிரத்தியேக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்காரணமாக ஏனைய மாநிலங்களில் இருந்து பல முதலீட்டாளர்கள் இம்மாநிலத்திற்கு வந்து முதலீடு செய்து பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளனர். சுவிற்சலாந்தில் கூடிய தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக இது காணப்படுகிறது.

| சுவிஸ்: அதிகாரப்பரவலாக்கல், அட்டவணை | தேசியப் பேரவையால் மட்டும் இயற்றப்படும் சட்டங்கள் | தேசியபேரவை இயற்றிய சட்டங்களில் மாநிலங்களால் மாற்றம் செய்யப் பட முடியாதவை | தேசியபேரவையும் மாநிலங்களும் இணைந்து இயற்றும் சட்டங்கள் | மாநிலங்களால் மட்டும் இயற்றப்படும் சட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதி இறக்குமதி வரி | ■ | | | |
| 2. நியமங்கள்(அளவை) | | ■ | | |
| 3. பணப்பெறுமதி | ■ | | | |
| 4. உள்நாட்டுவரி | | | ▥ | |
| 5. தொலைதொடர்பு | ■ | | | |
| 6. போக்குவரத்து | | ■ | | |
| 7. நெடுஞ்சாலை | | | ▥ | |
| 8. இராணுவம் | | ■ | | |
| 9. பொலிஸ்(மாநிலம்,மத்தி) | | | | □ |
| 10. இரும்புப்பாதை சேவை | ■ | | | |
| 11. நீர்போக்குவரத்து | ■ | | | |
| 12. நீர்பரப்புப்பணிகள் | | | ▥ | |
| 13. விவசாயம் | | | ▥ | |
| 14. வேட்டை,மீன்பிடித்தல் | | | ▥ | |
| 15. வறுமையொழிப்பு பணி | | | | □ |
| 16. தொழிற்சட்டங்கள் | | ■ | | |
| 17. மருத்துவக் காப்புறுதி | | | ▥ | |
| 18. ஓய்வூதியம்,சொத்துக்கள் | | ■ | | |
| 19. வீடமைப்பு | | | | □ |
| 20. கல்வி | | | ▥ | |
| 21. கலாச்சாரம் | | ■ | | |
| 22. குற்றத்தடுப்பு | | ■ | | |
| 23. மதம் | | | | □ |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மொழி கொள்கை அமுலாக்கம் பற்றி ....

ஜேர்மன், பிரஞ்சு, இத்தாலி, சுவிஸ் ரோமன் ஆகிய 4 மொழிகளும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன. சுவிஸ் நாட்டின் பூர்வீகக் குடிகள் பேசும் மொழியான சுவிஸ்ரோமன் தவிர்ந்த ஏனைய 3 மொழிகளும் அரசகரும மொழிகளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

சுவிஸ்சின் பூர்வீகக்குடிகள் அரசதுறையில் வேலைவாய்ப்பைப் பெறவேண்டுமாயின் அரசகரும மொழிகளில் ஒன்றினை கட்டாயமாகக் கற்கவேண்டும்.

## இலங்கையில் உள்ள இனப்பிரச்சனையை தீர்க்க சுவிஸ்நாட்டை ஒத்த அரசியற் தீர்வு பொருத்தமானதா என அபிப்பாராயம் திரட்டிய போது திரு.பீற்றர் கூறியவற்றிலிருந்து....

சுவிஸ் நாட்டுப் பிரச்சனைகளையும், சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டும், இலங்கைப் பிரச்சனையைக் கருத்திற் கொண்டுமே இதற்கு விளக்கமளிக்கமுடியும்.

1848 வரை சுவிஸ்சில் பல மாநிலங்கள் தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் செயற்பட்டுவந்திருந்தன. பிரத்தியேகமான இராணுவம், வேறுபட்ட நாணயங்கள், வெளிநாட்டு அரசியல் உறவுகள், புகையிரத தபால் சேவைகள் முதலானவற்றை இம்மாநிலங்கள் வேறுவேறாக தாமே மேற்கொண்டு வந்திருந்தன. 1847ல் ஏற்பட்ட மோசமான உள்நாட்டுக் கலவரங்களையடுத்து இம்மாநிலங்கள் மத்திய சமஸ்டி அமைப்புமுறை ஒன்றை உருவாக்கி மேற்படி துறைகளை தேசியமயபடுத்தியிருந்தன. சமஸ்டி ஆட்சி முறையின் கீழ் இன்று வரை இத்தகைய ஒரு வடிவமே தொடரப்படுகிறது.

ஆனால் இலங்கையிலோ 1833ம் ஆண்டில் பிரித்தானியர் தமது காலனித்துவ ஆட்சிக்கு வசதியாக ஏற்கனவே தனித்தனியாக இயங்கி வந்த இராச்சியங்களை ஒன்றிணைத்திருந்தனர். பலவந்தமாக இணைக்கப்பட்ட இலங்கையின் வரலாற்றுக்கும், இயல்பாக இணைந்து கொண்ட சுவிஸ் உடைய வரலாற்றுக்கும் பல அடிப்படை வேறுபாடுகள் உண்டு.

இங்கு பெரும்பான்மையான மக்கள் ஜேர்மன் மொழியை பேசுகின்ற நிலையில், சிறுபான்மையினரான மக்கள் பிரஞ்சு, இத்தாலி மொழியை பேசிவருகின்றனர். பெரும்பான்மை மொழிபேசும் மக்கள் சிறுபான்மை மொழி மக்கள் மீது ஆளுமை செலுத்தும் போக்கு இங்கு இல்லை. ஆனால் இலங்கையிலோ பெரும்பான்மை தேசிய இனத்திற்கும் சிறுபான்மை தேசிய இனத்திற்குமிடையே இனப்பிரச்சனை கூர்மை அடைந்துள்ளது. ஆதலால் இவ்விரு நாடுகளுக்குமுரிய பிரச்சனைகள் வேறுவேறானவை.

மேலும் சுவிஸ் நாட்டை சூழவுள்ள ஜேர்மனி, பிரான்சு, இத்தாலி போன்ற பலம் பொருந்திய நாடுகள் தமது மொழி பேசும் மக்களைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்தாத வகையில் இம்மொழிகளைப் பேசும் சுவிஸ் நாட்டு மக்கள் தமக்கிடையே ஐக்கியப்பட்டுள்ளனர். இத்தகைய ஒரு புறச் சூழல் இலங்கையைப் பொறுத்தவரை காண முடியாததாகும். இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இலங்கையானது எப்போதும் இந்தியாவின் அரசியல் மற்றும் கலாச்சார ரீதியான வீச்சுக்குட்பட்டே காணப்படுகிறது.

எனவே அடிப்படைகளில் இலங்கை சூழ்நிலைகளையும், சுவிஸ்நாட்டு சூழ்நிலைகளையும் ஒப்பிட முடியாது. மாநிலங்களுக்களுக்கான அதிகார பரவலாக்கலை கருத்திற் கொண்டு பார்த்தால் சுவிஸ் நாட்டில் பொருளாதார விருத்தியையும், தேசிய வருமானத்தின் பங்கீட்டையும் முதன்மை படுத்தியே அதிகார பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் ஒரு தேசிய இனம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதற்குரிய அதிகாரப் பரவலாக்கத்தையே வேண்டிநிற்கிறது. ஆகவே இருவேறுபட்ட நோக்கங்கள் இருப்பதால் சுவிஸ்நாட்டிற்குரிய அரசியல் அமைப்பின் அதிகார பரவலாக்கங்கள் இலங்கை பிரச்சனையை தீர்க்க முன்மாதிரியாக இருக்குமென சொல்லமுடியாது. ●

## தேசியவாதத்துக்கு அதிகப்படி வாக்குக்கள்

கிழக்கு ஜேர்மனி, மேற்குடன் இணைக்கப் பட்டதன் பின்னர் முழு ஜேர்மனிக்களுமாக முதந்தடவையாக டிசம்பர் மாதம் 3ம் திகதி நடைபெற்ற தேர்தல் சர்வதேச அரங்கில் கூர்மையாக அவதானிக்கப் பட்டு வந்தது. முழு ஜேர்மனிக்கும் இதற்கு முதல் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் கிட்லரின் தலைமையின் கீழ் நாசிக் கட்சி பதவிக்கு வந்திருந்தது.

தேர்தற் பிரச்சாரத்தின் போது ஆளும் கட்சியான வலதுசாரி கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி குடியரசுக் கட்சியின் தேர்தற் பிரச்சாரத்தைத் தாமே உள்வாங்கிக் கொண்டு, அதிவலதுசாரிகளின் வாக்குகளையும் பெற்று பலமான கட்சியாக வெற்றிபெற்றுள்ளது.

கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியின் தேசியவாதக் கொள்கைகள், வெளிநாட்டவர்களுக்கு, இடதுசாரிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் அனைத்து மறைமுகமாக 1933ல் ஜேர்மனியின் வளர்ச்சியை ஞாபகப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி பழைய ஜேர்மன் சோசலிசக் குடியரசில் மட்டுமன்றி மேற்கிலும் வளர்ந்து வரும் தேசியவாத அலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வெற்றியீட்டியுள்ளனர். மேற்கு பேர்லினில் ஒரு வருடங்களுக்கு முன்னர் அரசமைப்பதற்கே பலமற்றிருந்த இக்கட்சி 50% வாக்குக்களைப் பெற்று சமூக ஜனநாயக, பசுமைக் கட்சியின் கூட்டரசை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

முன்னைய கிழக்கு ஜேர்மனியை ஆண்டு வந்த ஐக்கிய சோசலிசக் கட்சியிலிருந்து உருவான சோசலிச ஜனநாயகக் கட்சி அண்ணளவாக 10% வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் நுழைந்த அதேநேரம் ஐரோப்பாவின் மிகப் பெரிய பசுமைக் கட்சி படுதோல்வி அடைந்து பாராளுமன்ற அங்கத்துவத்தை முற்றுமுழுதாக இழந்துள்ளது. சமூக ஜனநாயககட்சியும் எதிர்பார்த்ததை விட படுதோல்வி அடைந்துள்ளதால் தற்போது மோசமான நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

கிறிஸ்தவ ஜனநாயக ஆட்சியின் கீழ் எதிர்வரும் காலங்களின் வெளிநாட்டவர்களின் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கப்படும் எனவும், வெளிநாட்டவர்களுக்கு எதிரான சட்டங்கள் அதிகரிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிதாய் வளரும் நாடுகளில் மக்கள்

RACE & CLASS என்ற ஆங்கில சஞ்சிகையில் (ஏப்ரல் 1990) திரு. ஏ.சிவானந்தன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் ர.சுந்தரம்

**புதிதாக வளரும் நாடுகளது 20ம் நூற்றாண்டின் வளர்ச்சி பற்றி சென்ற இதழில் அலசியபோது முடிவில் இவ்வாசகர்களால் அவ்வவ் நாட்டு மக்களுக்கு எவ்வகையான பயன்கள் கிட்டின என்ற வினாவை எழுப்பி வைத்தோம். அதற்கான பதிலை இப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியுமா எனப்பார்ப்போம்.**

முதலாவதாக அதிவேகத்தில் தொழில்மயப் படுத்தப்பட்டு வரும் பிறேசிலை எடுத்துக் கொள்வோம். அங்கே இவ் வளர்ச்சிக்கு அத்திவாரமாக அடிமட்டத்தில் இருப்பது முக்கூட்டணி என பீற்றர் எவான்ஸ் (Peter Evans) இனால் வர்ணிக்கப்படும் பல்தேசிய நிறுவனங்கள் (Multinational), அரச மூலதனம் (State Capital), உள்நாட்டு உயர்மட்ட மூலதனம் (Elite Local Capital) என்பவையாகும்.

இங்கே கவலைக்கிடமான வேடிக்கை என்னவெனில் இம்முக்கூட்டணியே இந்நாட்டு மக்களிடையே அதிவேகத்தில் அதிகரித்து வரும் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும், இயற்கை சுற்றாடலின் (Ecological) பாரிய அளவில் தொடரும் அழிவிற்கும், நாட்டினது பொருளாதரத்தினை நெருக்கிப்பிடித்து சிறிதுசிறிதாக சாகடிக்கும் $115 பில்லியன் கடனுக்கு மூலகர்த்தாவாகும்.

இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு கட்டப்படவுள்ள Kararo hydro-electric அணைத் திட்டமாகும். அமேசன் நதிப்பிராந்தியத்தில் அமைக்கப்படவிருக்கும் இவ்வணையினால் மிகவும் வேண்டியதாகவுள்ள மின்சாரத்தைப் பெற்று, பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன்மூலம் நாட்டின் பிரமாண்டமான கடனை அடைக்க முற்படலாம். இது திட்டத்தின் ஒருபக்கம். ஆனால், அதன் மறுபக்கமோ நாட்டின் பாரம்பரியமானதும் உலகிற்கு முக்கியமானதுமான வனாந்தரப் பகுதியின் பாரிய அழிவையும், அங்கே ஆதிகாலமுதல் வாழும் இந்திய மக்களது சமுகங்களின் நிர்மூலத்தை குறித்து நிற்கிறது.

ஏற்கனவே, தங்கத்திற்காகவும் (தங்கவுற்பத்தியில் பிறேசில் உலகில் நான்காவதிடம்), இரும்புத்தாதிற்காகவும் ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த நாடுகளும், ஜப்பானும் தமது உருக்கு உற்பத்திக்கு பிறேசிலையே நம்பியுள்ளன. அகழ்வுகளை கண்மூடித்தனமாக நடத்துவதாலும், வளர்ந்த நாடுகளது கடினமரத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக (500 வருடங்களுக்கு மேல்) வளர்ந்த மரங்களை சிந்தனையின்றி தறித்து வீழ்த்துவதாலும், இவ் அமசோனியாப் பிராந்தியத்தின் கணிசமான நிலப்பரப்பு பெரும் அழிவுகளை கண்ட பிரதேசமாக, பெரும் மேடு பள்ளங்களைக் கொண்டு சிதைந்து காணப்படுகிறது.

தெற்கு ஆபிரிக்காவின் Cons Gold, பிரித்தானியாவின் Rio Tint Zinc போன்ற, பல ஜப்பானிய, அமெரிக்க ஸ்தாபனங்களுடன் கூட்டாக, உள்நாட்டு பெரும்முதலாளிகளும், காணி வாங்கி விற்கும் வியாபாரிகளும், வட்டிக்கு கடன்கொடுக்கும் முதலாளிகளும் சேர்ந்து நடத்தும் இந்த அகழ்வுகளால் ஏற்படும் அழிவுகளை எழுத்துக்களால் வர்ணித்து விடமுடியாது. இவ்வகையில் "முன்னேற்ற வளர்ச்சியை" தேடி பாரிய கடனுக்குள் அகப்பட்டுவிட்ட பிரேசில் அரசாங்கமோ, இன்று அந்தக் கடனை அடைக்க மேலும்மேலும் "முன்னேற்ற வளர்ச்சியை" நாடியோடவேண்டியுள்ளது.

ஆனால் இப்படியான "முன்னேற்றவளர்ச்சியை" சிங்கு (Xingu) ஆற்று அணைத்திட்டம் பிரேசில் தொடக்கம் வடஅமெரிக்கா வரையுள்ள இந்திய மக்களது ஒன்றுபட்ட எதிர்ப்புக்கும் Green movement இனுடைய மறுப்புப் போராட்டங்களுக்கும் மட்டுமின்றி, மிகவும் விநோதமான வழியில் உலகவங்கியினது (World Bank) அதிருப்தியையும் தாண்ட வேண்டியதால் தடங்கிப் போயுள்ளது.

இதற்கான காரணமாக தனது இயற்கைச் சுற்றாடல் மீதான அக்கறையென்று உலகவங்கி வெளிப்பிரச்சாரம் செய்த போதிலும் உண்மையான காரணம், அது மேலும் மூலதனத்தை முடங்கிப் போகும் திட்டங்களுக்கு வாரிவழங்க விரும்பாதமையையும், இந்தியர் இயற்கை பாதுகாப்பு அமைப்புகளினது இக்காடுகளை வாங்கிக் கொள்ளும் முயற்சியுமேயாகும்.

## மெக்சிக்கோவும் தொழில்மயப்படுத்தலும்

மெக்சிக்கோவினது தொழில்மயப்படுத்தலும் பிரேசிலில் நடந்தது போலவே வெளிநாட்டு, உள்நாட்டு மூலதனங்களின் கூட்டணியிலேயே அமைந்தது. 1980 வரையும் வெளிநாட்டு மூலதனம் (ஏகப்பட்டளவில் அமெரிக்க மூலதனம்) $ 27 பில்லியன்களாகவும் இதில் அதிக சதவிகிதம் பொருள் உற்பத்தித்துறையை தழுவியதாகவும் உள்ளது. சூசன் ஜோர்ச் (Susan George) இனது கணிப்பின்படி இந்நாட்டு பிரத்தியேகமாக நடத்தப்படும் அகழ்வுகளின் உற்பத்தியில் 50% த்தினையும், இறப்பர் உற்பத்தியில் 84% தினையும், புகையிலை உற்பத்தியில் 80% த்தினையும், இராசயனவுற்பத்தியில் 67% த்தினையும், இயந்திர உபகரணவுற்பத்தியில் 62% த்தினையும், மின்சாரவுபகரண உற்பத்தியில் 79% த்தினையும் வெளிநாட்டு நிறுவனங்கள் தம்வசமாக்கிக் கொண்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெக்சிக்கோ பெற்றோலிய எண்ணெை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வரிசையில் இடம்பெறத் தொடங்கியதும், கடன் தொல்லைகள்தான் தொலைந்து போய்விடாது போகினும், குறைந்தபட்சம் நாட்டின் பொருளாதாரத்தையாவது ஸ்திரப்படுத்தி உதவி இருக்க வேண்டும். ஆனால், எதிர்மாறான நிலைமைகளே உருவாகி, நாட்டினை மேலும் கடன் வெள்ளத்தில் அமுக்கவே உதவியுள்ளது. இதற்கு முக்கியகாரணி மேலிடம் தொடக்கம் கீழ்மட்டம்வரை வரையளவின்றி பரந்துவிடக்கும் ஊழல் என்றால் மிகையாகாது. பெற்றோலிய எண்ணைத்துறையை நம்பி மெக்சிக்கோ கடனே படத்தொடங்கியது.

பெற்றகடனில் பெரும்பங்கு அரசியல் வாதிகளாலும், (முன்னைய அதிபர் Lopez Portillo உட்பட ) பல அதிகாரிகளாலும் கொள்ளையிடப்பட்டு சுவிஸ்நாட்டு வங்கிகளிலுள்ள அவர்களது கணக்குகளுக்கு போய் சேர்ந்துவிட்டது. பெற்றோலியத்தினாலான வருமானத்தில் முக்கிய பங்கோ வலதுசாரி அமைப்பான எண்ணைத்தொழிலாளர் சங்கத்தினால் (Oil Workers Union) அதன் தலைவர் Joaquin Hernandez Galicia இனாலும் சூறையாடப்பட்டுவிட்டது. ஆக மொத்தத்தில் ஊழல் கடனையும் வருமானத்தையும் தீனியாக்கிக்கொண்டது. இதனால் பழைய கடனால் வந்துள்ள தொல்லைகளை போக்க மெக்சிக்கோ மீண்டும் பெருமளவில் கடன்பட்டுள்ளது.

## பல்தேசிய நிறுவனங்களின் பிடிக்குள் புதிதாக வளரும் நாடுகள்

இன்று பல்தேசிய நிறுவனங்களின் கைகளில் இல்லாத, அல்லது ஈடுபாடுகளில்லாத தொழிற்துறை ஒன்றினை பிரேசில், மெக்சிக்கோ, தென்கிழக்காசிய நாடுகள் என்பவற்றிடையே காண்பதென்பது அரிதான ஒரு விடயம். இலத்திரனியல் தொழிற்துறை முறையைப்பார்ப்பின் அங்கே இத்துறையினதும், நிறுவனங்களினதும் போக்கினை உணர்ந்துகொண்டால் இவ்விடயம் எதிர் பார்க்கக்கூடியதே. ஸ்தாபனங்கள் ஒன்றுசேருவதும் , இணைந்து செயற்படுவதும், ஒன்றை ஒன்று விழுங்குவதும் இங்கே சகஜமானவிடயம். ஏனெனில் இங்கே மூலதனத்தை பெருமளவில் விடுபவர்கள் வெறும் தொழில்நுட்பத்தை மட்டுமின்றி அதற்கான சந்தையையும்கூடவே தமது கைகளில் வைத்திருக்கவேண்டுமென காத்திரத்துடன் இயங்குகிறார்கள்.

எனவே புதிதாக வளரும் நாடுகள் தொடர்ந்தும் "முன்னேற்ற வளர்ச்சியை" காணவேண்டுமெனில், பல்தேசிய நிறுவனங்கள் கீறும்கோடுகளில் நடக்கவேண்டியது கட்டாயமாகிறது. தாய்வானில் விஞ்ஞானப்பூங்கா (Science Park) இல் குடிகொண்டுள்ள ஸ்தாபனங்களில் 50% மானவை தலைமையகங்களை அமெரிக்காவில் கொண்டுள்ளன. சிங்கப்பூரில் 5 வருடங்களுக்கு முன்னர் முதலாவது நீர்சுத்திகரிப்புக்குரிய சாதனங்களை கொண்டுவந்து சேர்த்து உற்பத்தியை தொடங்கியது. இத்தாலி-பிரஞ்சு பெரும் ஸ்தாபனங்களின் கூட்டமைப்பான SGS Thomson Micro Electronics என்பதாகும். கொங்கொங்கிலோ கூட்டுமுயற்சிகளின்றி வேறெவற்றையுமே காணமுடியாது.

இப்படியாக பொருளாதார உற்பத்தித்துறைகளில் சுதந்திரமான விடயம் என்பது இந்நாடுகளிலே கிடையாது. இப்படியாக பொருளாதார உற்பத்தித்துறைகளில் சுதந்திரமான, தன்னியல்பான வளர்ச்சியோ, முன்னேற்றமோ கண்டு, தனதுமக்களினது தேவைகளை பூர்த்தி செய்யும் தன்மையோ இயல்போ இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு கிடையாது எனலாம்.

ஆனால், ஏற்றுமதியையே மையமாகக்கொண்ட இத்தொழில்மயப் படுத்தல்களை சுற்றிய பல்தேசிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்த தொழில்மயப்படுத்தலாகவன்றி வேறெதுவுமாக இருக்கும் என்று நாம் எப்படித்தான் எதிர்பார்க்க முடியும்? இங்கே உள்நாட்டு மூலதனம் அந்நிய பல்தேசிய மூலதனங்களுக்கு கட்டுப்பட்டதானதாகமட்டுமன்றி அதனது தேவைகளுக்காக மீண்டும் இயக்கப்படுகிறது. இந்த உள்நாட்டு மூலதனம் பெயரளவில் அதிபதியாகத்தான் உள்ளது. ஆனால் அதன் கட்டுப்பாட்டில் எதுவுமே இரா. அதனால் உற்பத்தி செய்யமுடியும், ஆனால் எதுவுமே விற்கமுடியாது. ஏனெனில், முன்னர் சுட்டிக்காட்டியதுபோல உற்பத்தியும் அதற்கான சந்தையும் உண்மையான அதிபர்களான பல்தேசிய நிறுவனங்களின் கைகளிலேயே இருக்கும்.

## பின்தள்ளப்படும் பின்தங்கிய நாடுகள்

புதிதாக வளரும்நாடுகளின் நிலமை இவ்வாறு இருக்க, பின்தங்கிய நாடுகளின் பாதையோ (Under Developed Countries) அவற்றின் பொருளாதாரத்தன்மையோ வேறுபட்டதாக உள்ளது. இங்கே மூலதனம் "உற்பத்தியை" நாடிச்செல்வதில்லை. தன்னால் எவ்வளவினை சேர்த்துக்கொள்ள முடிகிறது என்பதுதான் அதன் குறிக்கோளாக இருக்கும்.

இந்நாடுகளில் ஈடுபடும் மூலதனத்தின் தன்மை புதிதாக வளரும்நாடுகளில் காட்டிக்கொள்வது போல நகர்ப்புறத்தையோ தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில் நாட்டத்தையோ கொண்டிராது நாற்றம் கொண்டதாக இருக்கும். உண்மையில் தனது சொரூபத்தின் கோலமான வடிவத்தினையே மிகவும் கொடூரமான, குரூரமான வழிகளில் அது இந்நாடுகளில் காட்டிக்கொள்கிறது.

தொடக்கத்திலிருந்து இங்கு ஈடுபடும் அந்நிய மூலதனம் உள்நாட்டு மூலதனங்களை ஒன்றிழுத்து உற்பத்தியில் போடுவதற்கான போக்கினை புதிதாக வளரும் நாடுகளில் ஏற்படுத்துவதுபோலன்றி, இந்நாடுகளின் மூலவளங்களை சூறையாடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது

இந்நாடுகளில் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வரும் உற்பத்திமுறையினது உண்மையான உள்ளடக்கம் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் இம்முறையானது, முன்னென்றும் போலில்லாது மிகவும் வித்தியாசமான வகையிலே, இலகுவாகவும் திடமாகவும் இந்நாடுகளை சூறையாடுவதற்காக முதலாளித்துவத்தின் கைகளிலே ஒப்படைத்துள்ளது.

இதற்கான உதாரணம் அதிக வேலை நேரத்தையும், சிரமத்தையும் வேண்டி நிற்கும் இலத்திரனியல் தொழிற்துறையின் கழிவுவேலைகள்மட்டுமல்ல, முன்னர்போல் மூலதனம் விலைகுறைநத்த தொழிலாளர் கூட்டங்களை இறக்குமதி செய்து, கூடவே அவர்களுடன் அடங்கிய சமூகப்பிரச்சனைகளையும் உட்கொணர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கடமைகளால்" அவஸ்தைப்பட வேண்டியதில்லை. மாறாக, இன்று மூலதனம் தான்வேண்டிய இடத்திற்கு-ஏன், குறிச்சிக்கே, ஆதாயத்தின் சதவீதம், தொழிலாளர் தரம்-விலை, உற்பத்திகள் போய்ச்சேர வேண்டிய பிராந்தியங்களின் தரங்கள் போன்றவற்றை அளவுகோலாகக் கொண்டு, கைகள்கட்டப்பட்டு வாய்மூடி நிற்கும் மூன்றாம் உலக தொழிலாளர்களை தேர்வு செய்து அங்கு போய் சேர்கிறது.

இதனால் உயர்பீடங்கள் கொண்ட தொழிலாளர் சந்தை ஒன்று மூலதனத்தால் உள்ளிருந்து வெளிவட்ட விளிம்பு வரை அமைக்கப்படுகிறது. இப்பீடங்களோ தொழிலாளர்களது திறமைகளின் அடிப்படையில் அமைந்தனவன்று. உண்மையில் திறமை தேவையற்ற அதேவேளை கடினமானதும் உடல்நலத்துக்கு பாதகமானதுமான வேலைகளையே இத்தொழிலாளர்கள் செய்கிறார்கள். பெண் தொழிலாளர்களது எண்ணிக்கை இத்தகைய தொழில்களில் அதிகமாகும். அதேவேளை இலகுவான, நேரடியான, இயந்திரங்களை கொண்டு நடத்தும் கருமங்களை மூலதனங்களின் இருப்பிடங்களிலுள்ள தொழிலாளர்களே கவனிக்கின்றார்கள். ஆகவே பாகுபாடு திறமையில் தங்கியில்லாது பிறகாரணிகளில் கருக்கொண்டுள்ளது.

மூலதனமானது எப்போதும் தொழிலாளர்களை சூறையாடி ஆதாயம் தேடுவதையே தன் முழு நோக்காகக் கொண்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் ஈடுபடத் தொடங்கியதிலிருந்து அதன் உக்கிரகத்தை அங்கு கூட்டிவிட்டுள்ள போதிலும் தனது இருப்பிடங்களிலுள்ள தொழிலாளர்கள் மேல் அதேயளவால் உக்கிரகத்தைக் குறைத்துள்ளது. எனவே இவ்விடங்களில் தொழிலாளர்கள் சந்தித்து வந்த கெடுபிடியும், கொடுமையும் சிறிது குறைந்து போனதால் அவர்களது வாழ்க்கை ஏதோ மூலதனத்தினால் முன்னேற்றம் கண்டுள்ளது போல் கூறக்கூடியவகையில் வெளித்தோற்றம் கொண்டுள்ளது.

(தொடரும்)

# காத்திரமான தேர்தலை எதிர்பார்த்து நிற்கிறோம்.



## "கதிர்" இதழுக்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) பிரதிநிதி ரிம் மஸ் கே (Tim Mas Ke) அவர்களுடன் ஆர்.நாயகன் பெற்ற செவ்வி.

*நீங்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரசினுடைய பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியிருக்கிறீர்கள். அவ்வகையான ஒரு பாடசாலை அமைப்பதற்கான காரணங்களையும், அங்கு நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் இங்கு பகிர்ந்து கொள்ளமுடியுமா ?*

தென்னாபிரிக்காவில் கல்விமுறைபற்றிய சரித்திரப் பின்னணியை முதல் கூறுகின்றேன். நிறவெறிக் கொள்கையின்படி கல்வி அமைப்பு வெள்ளையர், கறுப்பு இன மக்கள், இந்தியர் ஆகியோருக்கு வேறு வேறாக இருக்கும். அதிலும் கறுப்பு இன மக்களில் வெவ்வேறு இனக் குழுக்களுக்கும் வேறுபாடுஉடையதாக இருக்கும். கறுப்பு இன மக்களின் கல்வித்தரம் மிகக் குறைந்ததாக வைக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதுடன் கறுப்பு இன மக்கள் தென்னாபிரிக்காவில் ஒரு முக்கிய இடத்தை எடுப்பதைத் தடுக்கின்றது. இதனால் ANC ஆனது கல்வி பற்றி கவனத்தில் எடுத்துள்ளது. ஏனெனில் கல்விதான் ஒரு சமுதாயத்தின் வசந்தமாகும். இதனால் 1955ம் ஆண்டளவில் கல்விபற்றி அக்கறை எடுத்துக் கொண்டோம். 1960 ம் ஆண்டளவில் "பண்டுஸ்தான்" எனப்படும் கல்விமுறை அமுல்படுத்தப்பட்டது. 1976 ம் ஆண்டளவில் மாணவர் கிளர்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். இதனால் பல முக்கிய மாணவர் தலைவர்கள் 1961 ம் ஆண்டிலிருந்து வெளிநாட்டிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த ANC யிடம் வந்தனர். இந் நிலையில் நாம் தன்சானியாவில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து எமது அமைப்பின் எதிர்கால திட்டங்களுடனான ஒரு கல்விமுறையை நடைமுறைப் படுத்தினோம். இங்கு உயர்தர வகுப்புவரையே படிக்க முடியும். அதன் பின்னர் எமக்கு உதவ விரும்பும் ஏனைய நாடுகளுக்கு அனுப்பி மேற்படிப்பு மேற்கொள்ளலாம்.

*"பண்டுஸ்தான்" கல்விமுறைபற்றி சிறிது கூறமுடியுமா?*

அறுபதுகளின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பண்டுஸ்தான் கல்விமுறையானது இனக் குழுக்களைப் பிரித்தாளும் தந்திரத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது. தென்னாபிரிக்க மக்களின் ஐக்கியமே தனது கொள்கை எனக் கூறும் ANC யினது பலத்தினைக் குறைப்பதற்காகவே இந்த கல்விமுறை கொண்டுவரப்பட்டது. ஆனால் எமது நாட்டு மக்களின் விழிப்புணர்ச்சி அதிலும் குறிப்பாக கடந்த 15 வருடங்களாக ஏற்பட்ட விழிப்புணர்வினால் பண்டுஸ்தான் முறை வெற்றி அளிக்கவில்லை.

*தென்னாபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ANC இனுடைய இன்றைய நிலைப்பாடு பற்றி எடுத்துக்கூற முடியுமா?*

தென்னாபிரிக்க மக்கள் ANC இன் பின்னால் அணிதிரண்டுள்ளனர். இன்று தென்னாபிரிக்காவில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களுக்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாவதாக மக்களுடைய அரசியல் விழிப்புணர்வு தென்னாபிரிக்காவில் ஏற்பட்டமைய சொல்லலாம். கடந்த பத்து, பதினைந்து வருடங்களில் இது மிகப் பாரிய அளவில் ஏற்பட்டுள்ளது. இக்காலத்தில் மக்கள் ANC இனைப் பலப்படுத்தி அதன்பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

இரண்டாவதாக ANC சர்வதேசரீதியாகப் பெற்றுவரும் ஆதரவு. நிறவெறி அரசுக்கெதிரான பொருளாதாரத்தடை, கலாச்சார, கல்வி, விளையாட்டுத் துறைகளிலான பகிஷ்கரிப்பு என்பனவாகும். இவையே எமது தலைவர்களை சிறையிலிருந்து விடுதலை செய்யக் காரணமாயிருந்தன.

ANC ஆனது சமாதானத் தீர்வையே விரும்புகிறது. இது ஹாராரே (HARARE) பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பிரகடனத்தின்படி அரசும் ANC யும் ஒன்றாக இருந்து சமாதானத் தீர்விற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும். இதன் மூலம் உயிரிழப்புகள் தவிர்க்கப்படும். இதன்படி டி.கிளார்க் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் சிரத்தை காட்டுவது தெரிகின்றது. ஹாராரே பிரகடனத்தின்படி ஒரு இடைக்கால அரசு உருவாக்கப்பட வேண்டும். இந்த இடைக்கால அரசு பரந்த அடிப்படையில் இருக்க வேண்டும்.

இவ் அரசே ஒரு தேர்தலுக்கு தயாரிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டும். இத் தேர்தல் நடுநிலையான ஒரு அமைப்பால் மேற்பார்வையிடப்பட வேண்டும். நமீபியாவில் ஐ.நா.சபை மேற்பார்வையிட்டதை போல இங்கும் செய்ய வேண்டும். சகல கட்சிகளும் பங்குபற்றக் கூடியதாக இத் தேர்தல் அமையவேண்டும் என ANC கூறுகிறது. நாம் மட்டுமே ஒரு தனிக் கட்சி என நாம் கூறவில்லை.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். அது ANC போராடும் ஜனநாயக உரிமைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். டி. கிளார்க் வலதுசாரி வெள்ளையரின் பயமுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார்.

வலதுசாரி வெள்ளையர் இன்காதா (INKATHA) எனப்படும் ஒரு சிறிய கறுப்பு இனத்தவரின் அமைப்பை உருவாக்கி ஆயுத உதவியும் செய்து வருகின்றனர். இதன்மூலம் கறுப்பு இனத்தவரை பிரித்திட முயல்கின்றனர். இதனை இரு இன குழுக்களுக்கிடையேயான மோதலென மேற்கு நாடுகள் பிரச்சாரம் செய்கின்றன. உண்மை அதுவல்ல. உண்மையில் அங்கு நிறவெறிக் கொள்கையை அமுல்படுத்த விரும்புவோருக்கும் அதை எதிர்ப்போருக்கும் இடையேதான் மோதல் நிகழ்கிறது.

"இன்காதாவின்" தலைவர் புதலேசி, நெல்சன் மண்டேலாபோல் ஒரு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற விரும்புவதுடன் தேர்தலை ஒத்திப் போட விரும்புகிறார் இதன்மூலம் சிறுபான்மை வெள்ளையர் அரசை நிலைநிறுத்த விரும்புகிறார்.

*ANC தமது ஆயுதப் போராட்டத்தை கைவிட விரும்புவதாக நெல்சன் மண்டேலா கூறியுள்ளார். இதுபற்றி விளக்க முடியுமா?*

1960ம் ஆண்டு ANC தடைசெய்யப்பட்ட போது ஆயுத போராட்டத்தை ஆரம்பித்தது. நாம் எமது அரசியல் இலக்கை அடைவதற்கான ஒரு கருவியாகவே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம். இது போராட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே. நாம் ஆயுதக் கலாச்சாரத்தில் காதல் கொண்டவர்களல்ல.

இன்று எழுந்துள்ள சூழ்நிலைகளில் நாம் அரசுக்கு எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளோம். இதன் மூலம் பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கான நல்ல சூழ்நிலையை டி. கிளார்க் இற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

*SACTU, COSATU ஆகிய தொழிற்சங்க கூட்டு கமிட்டிகளின் மீதான தடை நீக்கப்பட்டு வெளிநாடுகளில் வாழ்ந்தோர் மீண்டும் தென்னாபிரிக்கா சென்று வாழலாம் என கூறப்படுகிறது. இந் நடவடிக்கைகளால், இத்தகைய தொழிற்சங்கங்களின் எதிர்காலப்பணி எப்படி அமையப்போகிறது?*

பெப்ரவரியில் பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பத்தின்போது டி. கிளார்க்கின் அரசாங்கம் சில அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் மீதான தடையை நீக்கின. ANC அறுபதுகளில் தடை செய்யப்பட்டபோது SACTU தடைவிதிக்கப்படாவிடினும் நடைமுறையில் தடைசெய்யப் பட்டிருந்தது. அதனால் அது செயலற்றதாகவே இருந்தது.

COSATU என்பது பல தொழிற்சங்கங்களின் கூட்டாகவே இருந்தது. SACTU தற்போது கலைக்கப் பட்டுள்ளதுடன் COSATU ஐ பலப்படுத்தும் வண்ணம் அதன் உறுப்பினர்கள் நாட்டினுள் சென்று வேலை செய்யும்படி கோரப்பட்டுள்ளனர். எமது மக்கள் பண்ணைகளிலும், சுரங்கங்களிலும் ஏனைய இடங்களிலும் தமது தொழிற்திறனை விற்கின்றனர். இவர்களை ஒருங்கிணைப்பதும், ஜனநாயகமயப் படுத்தலிலும் பங்களிக்க வைப்பதே COSATU இன் வேலையாகும்.

*தென்னாபிரிக்க கம்யூனிசக் கட்சியும் (SACP) அதன் தலைவர் சுலோவோவும் அரசு- ANC பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளக் கூடாதென அரசு கோரியுள்ளது பற்றி உங்கள் கருத்து என்ன?*

ஜோ சுலோவோ 2 ம் உலக மகா யுத்தத்திலும் கலந்துகொண்ட ஒரு பழைய தீவிரவாதி ஆவார். அத்துடன் நிறவெறி கொள்கைக்கெதிரான ஒரு வெள்ளையர் என்பதும் குறிப்பிடத்தக்கதுடன், ANC தேசிய நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவருமாவார். அவர் (SACP) அங்கத்தவராக அல்லாமல் எமது தூதுக்குழு அங்கத்தவராகவே அரசுடனான பேச்சுக்களில் இரு தடவைகள் கலந்து கொண்டிருந்தார். பொலிசார் திட்டமிட்டு அவரை நீக்குவதற்காக அவர்மீது பழி சுமத்திய போதிலும் ANC இன் உறுதியினால் அவர் நீக்கப்படவில்லை. தேர்தலில் மக்கள் SACP ஐ தெரிவுசெய்தால் அதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். சுதந்திரமான தேர்தல் மூலமே மக்கள் அதை நிரூபிக்க முடியும். மக்கள் தீர்ப்பு எதுவானாலும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டியது ஜனநாயக சக்திகளின் கடமையாகும். அதையே ANC வேண்டிநிற்கின்றது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நவம்பர் 15

உலகத்தின் கலண்டரில்
பல தினங்கள்
நினைவுகூரப்பட்டு வருகிறது.

ஒரு கற்பகதருவின்
கைகளுக்கு
விலங்கிட்டு
ஊமையாக்கிய
மனிதபண்பு
இங்கே மறைக்கப்பட்டு போயுள்ளது.

நேயத்தை
தூசித்த துரோகிகள்
வார்த்தைகளால்
"நாடற்றவர்" நாமத்தை
இலவசமாக விநியோகித்தனர்.

எங்கள்
வாழ்க்கையின்
இருண்ட நாள்
ஆளும் கூட்டத்திற்கு
அரியணையாயிற்று.

வெந்த புண்ணில்
வேல் வீசிய
தன் வக்கிரக
பாரம்பரியத்தை
கட்டியம் கூறிய தலைமைகள்.

செல்வ ஊற்றின்
மூலத்தை
இனச்சாந்தால்
இறுகப்பூசி மெழுகிவிட்டனர்.

தன்முகத்தையே
இழந்தாலும் பரவாயில்லை,
எதிரிக்கு
கையும், வாயும்
இருக்கக் கூடாது.

தேயிலையின்
செழிப்பை தந்தவர்களின்
வாழ்க்கை
புறக்கணிக்கப்பட்டுப்போக
வரலாற்றில்
தமிழ் இனத்தின் முதுகில்
குத்திய முதல் குத்து.
இனத்தின் பேரால்
வர்க்கம் பிரித்து பார்க்கப்பட்டது.

நாலு தசாப்த
நினைவுகளை
மலை முகடெங்கும்
பொறித்து வைக்கிறோம்.
அடிமையாக..., அந்நியனாக...,
வாழ்வதைவிட....
இந்த மண்ணின் மைந்தனாக
மனிதனாக
நம்மை பிரகடனப்படுத்துவோம்..
நாடற்றவரல்ல நாம்.

நவம்பர்-15
நமது தினம்
இத்தீவில் மனிதத்தை
இனச்சேற்றுக்குள்
புதைத்த வரலாற்றுத்தினம்
நினைவில் பதிப்போம்.

ஜி. எம். பரம்சோதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்